பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | சித்திரை 08 சனிக்கிழமை 21.04.2018 | கதிர் 166

லசந்தவின் கொலை; முக்கிய தகவல்கள் விரைவில் அம்பலம்

கொழும்பு, ஏப்.21

'தசண்டேலீடர்'பத்திரிகையின்முன்னாள் பிரதம ஆசிரியரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான லசந்த விக்ரமதுங்கவின் கொலையுடன் சம்பந்தப்பட்ட முக்கிய தகவல்கள் அடங்கிய அவரது குறிப்பேடு, பயங்கரவாத

பக்கம் 03

ஈ.பி.டி.பியிடம் ஆதரவு கேட்டது உண்மையே!

ஒப்புக்கொண்டார் சிறிகாந்தா

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21

"வடக்கு - கிழக்கில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைப்பதற்காக ஈ.பி.டி.பியிடம் பொதுக் கொள்கையின் அடிப்படையில் ஆதரவு கோரியது உண்மைதான். அந்த வெளியிப்படையான உண்மைச் சம்பவத்தை யாருமே மறுக்கமுடியாது."

- இவ்வாறு நேற்று உண்மையைப் போட்டுடைத்தார் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் செயலாளர் நாயகம் சட்டத்தரணி என்.சிறிகாந்தா. பக்கம் 14

யாழ். பல்கலைப் பேரவைக்கு 15 வெளிவாரி உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஆட்சி அதிகார சபையாகிய பேரவைக்கு 15 வெளிவாரிஉறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் சிங்களவர்கள்.

தெரிவு செய்யப்பட்ட வெளிவாரி உறுப்பினர்களின் பெயர் விவரங்களைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்

பக்கம் 14

போதுக் கோள்கைப் போக்கை மீறியமையால்

நெடுந்தீவில் ஈ.பி.டி.பிக்கு கூட்டமைப்பு பதிலடியாம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.21

வேலணை, கரவெட்டிப் பிரதேச சபைகளில் கூட்டமைப்புக்கு எதிராக ஈ.பி.டி.பி. செயற்பட்ட காரணத்னால் நெடுந்தீவுப் பிரதேச சபையைக் கைப்பற்றிப் பதிலடியுடன் கூடிய அதிர்ச்சி

பக்கம் 14

பதவிக்காக யாருடனும் கூட்டுச் சேர்வார் சுரேஷ்

சாடுகிறார் கஜேந்திரகுமார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளூராட்சிச் சபைகளில் மற்றைய கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைப்பதைத் தவறு என்று

பக்கம் 03

நாட்டைப் பிரிப்பதே சம்பந்தனின் கடமை

கூறுகிறார் மஹிந்த

கொழும்பு, ஏப்.21

நாட்டைப் பிளவுபடுத்துவதை மாத்திரமே எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தமது கடமையாகக் கொண்டுள்ளார் என முன்னாள் ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பக்கம் 14

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்; மாணவர் ஒன்றியத்தின் அழைப்பில் சந்தேகமாம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.21

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நாளைச் சகலரும் இணைந்து நினைவு கூரவேண்டும் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள

பக்கம் 03

புதிதாக 1,200 குடும்பங்கள் வலி. வடக்கில் மீள்குடியமர்வு

கடந்த வாரம் விடுவித்த பகுதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்.21

வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து28ஆண்டுகளின் பின்னர் அண்மையில் விடுவிக்கப்பட்ட 683 ஏக்கர் நிலப்பரப்பில் ஆயி

பக்கம் 14

100 வீதம் புனிதம் பேணுவதால் எதையும் சாதித்துவிட முடியாது

சுரேஷ் பிறேமச்சந்திரன் கூறுகிறார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.21

தேசியம் - சுயநிர்ணயம் தொடர்பில் ஒரே கொள்கையைக் கொண்ட கட்சிகள் மக்களின் நலன்களுக்காக இணையவேண்டும். ஆனால் நூற்றுக்கு நூறு வீதம் புனிதம் பேணுவதனால்

பக்கம் 03

மோடிக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

இந்தியாவின் காஷ்மீரில் சிறுமி ஆஷிபா 8 பேரால் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு நீதி கோரிக் கொழும்பிலுள்ள முஸ்லிம் மக்கள் இணைந்து இந்தியத் தூதரகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

ஜக்கிய சமாதானக் கூட்டமைப்பு ஏற்பாடு

பக்கம் 14

மனோவின் கட்சிக்குள் பிளவு!

நவோதயவுடன் கைகோத்தனர் வேலணை வேணியன் அணியினர்

கொழும்பு, ஏப்.21

மனோகணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அந்தக் கட்சியின் உபதலைவரும் முன்னாள் கொழும்பு மாநகர சபையின் உறுப்பின

பக்கம் 14

சு.கவின் மேலும் 10 பேர் எதிரணிக்குத் தாவுவராம்

கொழும்பு, ஏப்.21

தேசிய அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேலும் பத்து அமைச்சர்கள் தங்கள் பதவிகளில் இருந்து விலகவுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கண்டியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

எதிரணியில் இணை

பக்கம் 03

மனோ கணேசனை அசைக்க முடியாது

கூறுகிறார் குகவரதன்

கொழும்பு, ஏப்.21

எமது கட்சிக்கும், தலைவருக்கும் ஒரு வரலாறு இருக்கின்றது. எவரின் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்காக, கட்சியையோ,தலைவரையோ

பக்கம் 14

80 லட்சம் ரூபா பண மோசடி; விசாரணை சி.ஐ.டிக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஏப்.21

வங்கிகளின் ஏ.ரி.எம். இயந்திரங்களில் மீள் நிரப்ப எடுத்து வரப்பட்ட பணத்தில் 80 லட்சம் ரூபா மோசடி இடம் பெற்றமை தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு பொலி

பக்கம் 14

இது ரகசியம் அல்ல!

தென்னிலங்கையில் அரசியல் களம் வேறு விதமாக நகரத் தொடங்கியிருக்கின்றது.அது பற்றிய சிந்தனை அல்லது தெளிவு தமிழர் தாயகப் பகுதியில் சிஞ்சித்தும் காணப்படவில்லை.

தமிழ் ஊடகங்கள் கூட அந்த விடயத்துக்கு முன்னுரிமை கொடுத்து மக்களுக்குத் தகவலை சரிவரத் தெரிவிக்க முயலவில்லையோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

தென்னிலங்கையில்

பக்கம் 03

காலைக்கதிர் Kalaikkathir

பொதுப் பணிகளில் படையினரை அனுமதிப்பது போராடும் எமது இனத்துக்குப் பெரும் இழுக்கு!

ஐங்கரநேசன் சுட்டிக்காட்டுகிறார்

கொழும்பு, ஏப். 21

நாம் முன்னெடுத்த ஆயுதப் போராட்டம் ஒடுக்கப்பட்டாலும், எமது தேசிய விடுதலைப் போராட்டம் இன்னமும் முடிவுக்கு வரவில்லை.

இந்தநிலையில்,எந்தப் படையினருக்கு எதிராக நாங்கள் ஆயுதம் ஏந்திப் போராடினோமோ, அதே படையினரைப் பொதுப் பணிகளில் நாம் அனுமதிப்பது போராடும் எம் இனத்துக்குப் பெரும் இழுக்காகவே அமையும்என்றுதமிழ்த்தேசியப்பசுமை இயக்கத்தின் தலைவரும் மாகாண சபை உறுப்பினருமானபொ.ஐங்கரநேசன்தெரிவித்துள்ளார்.

கோண்டாவில்ஸ்ரீநாராயணா சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டுவிழா நேற்று முன்தினம் நிலைய முன்றிலில் நடைபெற்றது.

இந்த நிகழ்சியில் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஐங்கரநேசன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாணத்தின் ஆளுநர்றெஜினோல்ட் குரேவை மாநகர சபையின் புதிய முதல்வர் ஆர்னோல்ட் மரியாதையின் நிமித்தமாகச் சந்தித்துள்ளார்.

அப்போது, நகரை அழகுபடுத்துவதற்கு இராணுவத்தின் உதவியைப் பெற்றுத் தருவதாகத் தன்னிடம் ஆளுநர் சொன்னார் என ஆனோல்ட் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் இராணுவத்தின் உதவியை ஏற்றுக்கொள்வாரோ இல்லையோ என்பது எனக்குத் தெரியாது. ஆனால், பொது மக்கள் செய்யவேண்டிய பொதுப் பணிகளுக்கெல்லாம் இராணுவத்தைப் பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

சனசமூக நிலையங்கள் சமூகப்பணிகளில்போட்டிபோட்டு ஈடுபட்டகாலம் ஒன்று இருந்தது. வீதிகளைச் சுத்தம் செய்வது, பொதுக் கிணறுகளையும் பூங்காக்களையும் பராமரிப்பது, குளங்களைத் தூர்வாருவது என்று சனசமூகநிலையங்கள் அவை அமைந்திருக்கும்கிராமங்களில் பொதுப்பணிகளை முன்னெடுத்து வந்துள்ளன.

போராட்டகாலத்தோடு இந்தப் பணிகளை அரச சார் பற்ற நிறுவனங்கள் கையில் எடுத்தன. இப்போது அந்தச் சேவைகளில் இராணுவம் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

இராணுவம் அவசர நிலைமைகளின்போது இடர்முகாமைத்துவங்களில் ஈடுபடுத்தப்படுவது உலக நடைமுறை. ஆனால் இங்கு இராணுவம் பொலித்தீனும் அல்லவா பொறுக்குகின்றது.

நாங்கள் செய்ய வேண்டிய பணிகளில் எல்லாம் இராணுவத்தை நுழையவிடுவோமானால் ஊர்கூடித் தேர் இழுக்கும் பெருமையைக் கொண்டுள்ள நாங்கள், கடைசியில் இராணுவம் கூடித் தேர் இழுத்த சிறுமைக்கு ஆளாக வேண்டிவரும்.

இராணுவத்தைப் பொதுப் பணிகளில் பயன்படுத்துவது அரசியல் ரீதியாக எமக்குப் பாதகமானது. இராணுவம் வெளியேற வேண்டும், இராணுவம் ஆக்கிரமித்துள்ளகாணிகளைவிடுவிக்க வேண்டும் என்றுநாம் ஒருபுறம் போராடிக்கொண்டு, இன்னொருபுறம் இராணுவத்தைச் சமூக சேவைக்கும்அழைப்பது ஒன்றுக்கொன்று முரணானது. ஒரு போதும் ஏற்புடையதாகாது.

இந்த நடைமுறையை அனுமதித்தால் இராணுவம் தமிழ் மக்கள் மீது கரிசனையாக உள்ளது, படையினரும் தமிழ் மக்களும் இரண்டறக் கலந்து விட்டார்கள் என்று அரசோடு சேர்ந்து நாமும் சர்வதேசத் துக்குச் சொன்னவர்கள் ஆவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.இந்த நிகழ்ச்சியின்போது குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதியில் இருந்து 30 மாணவர்களுக்கு பொ. ஐங்கரநேசன் துவிச்சக்கர வண்டிகளை வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டு அலுவல்கள் ராஜாங்க அமைச்சரை சந்தித்தார் பெல்ஜியம் தூதுவர் ஜீன் லுயிக்ஸ்

கொழும்பு, ஏப். 21

வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சருக்கும் இலங்கையிலுள்ள பெல்ஜியம் தூதுவர் ஜீன் லுயிக்ஸுக்கும் இடையில் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இலங்கைக்கு ஜீ.எஸ்.பி. வரி நிவாரணம் கிடைத்தை தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்படக்கூடும் என்று இலங்கையிலுள்ள பெல்ஜியம் தூதுவர் இதன்போது குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கும் இடையில் அரசியல் மற்றும் வர்த்தக தொடர்புகளை வலுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கையிலுள்ள வர்த்தக பிரதிநிதிகள்சிலர்பெல்ஜியத்திற்குஅடுத்த மாதம் செல்லவுள்ளனர்.

இலங்கையின் விவசாயத்துறை அறுவடையின் போது இடம் பெறும் வீண்விரயத்தை தடுக்கக்கூடிய திட்டம் ஒன்றை தனது அரசு தயாரித்துள்ளது என்றும் பெல்ஜியம் தூதுவர் இராஜாங்க அமைச்சரிடம் மேலும் குறிப்பிட்டார்.

கொழும்புத் துறைமுகத்தில் ரஷ்ய கடற்படைக் கப்பல்!

கொழும்பு, ஏப். 21

ரஷ்ய கடற்படையின் பயிற்சிக் கப்பலான 'Perekop' நல்லெண்ண விஜயமாக கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்தக் கப்பலுக்கு கடற்படையின் மரபுகளுக்கு அமைய, இலங்கைக் கடற்படையினர் வரவேற்பு அளித்தனர்.

இந்தக் கப்பல் ஐந்து நாள்கள் கொழும்பில் தரித்து நிற்கும், இதன்போது ரஷ்ய மாலுமிகள், இலங்கைக் கடற்படையினருடன் பல்வேறு விளையாட்டு, கலாசார பயிற்சி நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளனர்.

138 மீற்றர் நீளமும், 17 மீற்றர் அகலமும் கொண்ட 'Perekop' கப்பல், 6900 தொன் எடை கொண்டது. 399 கடற்படையினர் இதில் பணியாற்றுகின்றனர். நாளை இந்தக் கப்பல் கொழும்புத்துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளது.

அர்ஜுன் மகேந்திரனுக்கு சிவப்பு அறிவித்தல் பிடியாணை!

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்அர்ஜுன்மகேந்திரனை கைது செய்ய சர்வதேச பொலிஸார் நேற்று சிவப்பு அறிவித்தல்பிடியாணையைபிறப்பித்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் பிணை முறி மோசடி சம்பந்தமாக குற்றப் புலனாய்வு திணைக்களம் நடத்திவரும் விசாரணைகளுக்கு அமைய சர்வதேச பொலிஸார் இந்த பிடியாணையைபிறப்பித்துள்ளனர். இலங்கையில் பிறந்த அர்ஜுன் மகேந்திரன் சில வருடங்களுக்கு முன்னர் சிங்கப்பூர் பிரஜா உரிமையைப் பெற்றுக் கொண்டார்.

வங்கித்துறையில் சிறப்பான அனுபவங்களை கொண்டுள்ள அவர், சிங்கப்பூரில் மாத்திரமல்லாதுசிலநாடுகளில் வங்கிகளில் தலைமை அதிகாரியாகபணியாற்றியுள்ளார்.சிங்கப்பூர்பிரஜையான அவர், சிங்கப்பூரில் கடைதெருவொன்றில்நிற்பது போன்ற புகைப்படம் ஒன்று நேற்று முன்தினம் ஊடகங்களில் வெளியாகியிருந்தது.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஈரான் சபாநாயகர் அலி லரி ஜானி சபாநாயகர் கருஜயசூரியவைச் சந்தித்தார்.

இந்தச்சந்திப்பு நேற்று முன்தினம்நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது.

பதினாறு உணவகங்களுக்கு எதிராக காலியில் வழக்கு!

கொழும்பு, ஏப். 21

காலி இந்துருவேயிலிருந்து பெந்தர வரையில் உள்ள சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தப் பரிசோதனையில், நுகர்வோருக்கு பொருத்தமற்ற உணவுகளை கொண்டிருந்த 16 உணவு நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு பொதுச்சுகாதார பரிசோதகர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

100 வீதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்களுடைய வேணவாக்களை நிறைவேற்ற முடியாது.

–இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசோடு இணைந்திருக்கின்ற போதிலும் ஒன்றுமே நடைபெறவில்லை. மக்கள் போராட்டத்தால்தான் காணிகள் விடுவிப்பு உட்படச் சில விடயங்கள் நடைபெற்றுள்ளன. ஆகவே தான் மக்கள் மாற்றத்தை விரும்புகின்றார்கள். இதனால்தான் எனது கட்சியும் மாற்றுத் தலைமையை வலியுறுத்தி வருகிறது.

இந்த நிலையில் தமிழ் மக்களின் வேணவாக்களை ஏற்றுக்கொள்ள கூடிய ஓர் அமைப்பு தேவை என முதலமைச்சர் கூறியுள்ளார். மக்கள் விரும்பினால் மீளவும் தான் அரசியலுக்கு வரத் தயார் எனவும் அவர் கூறியிருக்கின்றார்.

தற்போது ஆட்சி அமைக்கப்பட்டுள்ள சபைகள் ஒற்றுமையாக இயங்குமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. அனைத்துச் சபைகளுமே உறுதியற்ற ஆட்சிகொண்ட சபைகளாக உள்ளன. மாகாண சபை உறுதியாக இருந்தால்தான் இவற்றைத் திறம்மிக்க சபைகளாகக் கொண்டுநடத்த முடியும்.

ஆகவே எதிர்கால மாகாண சபை தமிழத் தேசியச் சிந்தனை கொண்டவர்களால் ஆளப்பட வேண்டும். கொள்கையால் ஒன்றிணைந்த தமிழ்க் கட்சிகளுக்குள் ஒற்றுமை அவசியம்.

தமிழ்த் தேசியக் கொள்கையில் நூற்றுக்கு நூறு வீதம் புனிதம் பேணுவதால் மக்களின் வேணவாக்களை நிறைவு செய்ய முடியுமா என்பது கேட்கப்படவேண்டும்.

சிங்கள மயமாக்கலை நிறுத்த கூட்டமைப்பு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? ஆகவே எங்கள் மண்ணை – மக்களைப் – பாதுகாக்க ஒரே சிந்தனை கொண்ட கட்சிகள் இணைந்து செயற்பட வேண்டும்.

எமது மண்ணில் தனித்துவத்துடன் நாங்கள் வாழ வேண்டுமானால் சரியான தலைமைத்துவம் தேவை. இந்தத்தலைமை மிக விரைவாக உருவாக்கப்பட வேண்டும். – என்றார். (ஐ–7)

மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அழைப்பு, பிழையானவர்களுக்கும், அவர்களின் பிழைகளுக்கும் வெள்ளையடிப்பதற்கான முயற்சியாக இருக்குமோ எனச் சந்தேகிக்கிறோம்.

– இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

முள்ளிவாய்க்கால் மண்ணில் படுகொலை செய்யப்பட்ட மக்களின் நினைவு நாளை ஒட்டுமொத்தத் தமிழ்த் தேசமும் நினைவுகூரவேண்டும். அதில் எமக்கு மாற்றுக்கருத்துக்கள் இல்லை. ஆனால் இறுதிவரை இனப்படுகொலைக்குத் துணை போனவர்களும், இனப்படுகொலைக்கான விசாரணைகளை முடக்க நினைப்பவர்களும் முள்ளிவாய்க்கால் மண்ணில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்காக அஞ்சலி செலுத்த வருவார்கள். அவர்களுடன் இணைந்து இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களும், அதனைக் கண் முன்னால் கண்டவர்களும் சேர்ந்து நின்று படுகொலை அஞ்சலி செலுத்துவது அபத்தம்.

அப்படியான ஒரு வேலையைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி செய்யாது. ஆகவே நடந்தது இனப்படுகொலையே என்பதையும், நடந்த இனப்படுகொலைக்கு நீதி வேண்டும் என உளமார சிந்திப்பவர்களும் ஒன்றிணைந்து படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதாக இருந்தால் அத்தகை ஓர் அஞ்சலி நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நிச்சயமாகப் பங்கு கொள்ளும்.

இனப்படுகொலையைச் செய்த அரசுக்கு ஒப்பாக நடந்து ஒத்தூதியவர்கள், நடந்த இனப்படுகொலைக்கான நீதி விசாரணையை முடக்க நினைப்பவர்களுடன் சேர்ந்து படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்தமாட்டோம்.

பல்கலைக்கழகச் சமூகத்தின் சகல நடவடிக்கைகளையும் நாங்கள் வரவேற்கிறோம். எங்களால் முடிந்தளவு ஒத்தாசை செய்கிறோம். எல்லாவற்றுக்கும் மேல் அவர்களை நாம் மதிக்கிறோம்.

ஆனால்இந்தநினைவுகூரல் தொடர்பாக எங்களுடன் ஒன்றுமே பேசப்படவில்லை. எங்களுடைய கருத்துக்கள் உள்வாங்கப்படவில்லை. ஆகவே பிழையான சிலருக்கும், அவர்களுடைய பிழைகளுக்கும் வெள்ளையடிப்பதற்கான ஒரு முயற்சியாக இது இருக்குமோ என நாங்கள் சந்தேகிக்கிறோம். – என்றார். (ஐ–7)

பதவிக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விமர்சித்தவர்களில் சுரேஷ் பிறேமச்சந்திரனும் உள்ளடக்கம். ஆனால் தான் யாரை விமர்சித்தாரோ அவர்களைப் போன்றே நடந்து கொண்டவர் சுரேஷ்.

– இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் தாம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

சுரேஷ் பிறேமச்சந்திரனும் அவருடைய ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியும் 100 வீதம் தமிழ்த் தேசியத்தை இறுக்கமாகக் கொண்டிருக்கவில்லை என சுரேஷ் அறிந்தோ அறியாமலோ கூறியிருக்கின்றார். அதனை நாங்கள் வரவேற்கிறோம். மேலும் கட்சிகள் கூட்டாக இணங்கிச் செயற்படவேண்டும் என்பதற்கு முதலில் அடிப்படையான நம்பிக்கையை மற்றவர்களிடம் உருவாக்க வேண்டும்.

தூய்மையான அரசியலைச் செய்வதென்பது வேறு. நடைமுறையில் மற்றவர்களிடத்தில் நம்பிக்கையை வளர்ப்பதென்பது வேறு. இவற்றுக்கிடையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் கொள்கை என்ன தேர்தலின் பின்னர் அவர்கள் கூட்டுசேர்ந்திருக்கும் கட்சிகள் எவை என்பதை மக்கள் நன்றாக அறிவார்கள். ஒருநகரசபையில் ஆட்சியமைப்பதற்காக எந்தக் கட்சியுடனும் சேர்வதற்குத் தயாரான இவர்கள் எப்படித் தமிழ்த் தேசியவாதக் கட்சியாக இருக்க முடியும்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளூராட்சிச் சபைகளில் மற்றைய கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைப்பதைத் தவறு என்று விமர்சித்தவர்களில் சுரேஷ் பிறேமச்சந்திரனும் உள்ளடக்கம். ஆனால் தான் யாரை விமர்சித்தாரோ அவர்களைப் போன்றே நடந்து கொண்டவர் சுரேஷ்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதனையும் மக்களுக்குச் செய்யாது என்பதை நாங்கள் இன்றல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியிருந்த நாள்களில் இருந்து கூறிக்கொண்டிருக்கின்றோம்.

ஆனால் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் இயங்கும் கட்சிகளின்ஒன்றிணைவு,கொள்கைக்கான இணைவாக இருக்க வேண்டுமே தவிர, வெறுமனே தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்கடிக்க வேண்டும் என்பதை மட்டும் இலக்காக கொண்ட கூட்டாக இருக்கக்கூடாது. –என்றார்.(ஐ–7)

சு.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யவுள்ள அவர்களையும் சேர்த்துக் கொண்டு அரசுக்கு எதிரான பரந்த மக்கள் கூட்டணியொன்றை உருவாக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டணியில் இலங்கையின் குடிமகன் யாராக விருந்தாலும் இணைந்து கொள்ளலாம் என்றும் கெஹலிய கூறினார். (ஐ)

லசந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விசாரணைப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் சந்திரத வாகிஸ்டரிடம் உள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரசன்ன நாணயக்கார குறிப்பேட்டை, வாகிஸ்டரிடம் வழங்கினார் எனத் தெரியவந்துள்ளது.

பிரசன்ன நாணயக்கார குற்றப்புலனாய்வுப்பிரிவினரால் கைது செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்தே இந்த தகவல் தெரியவந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதற்கு அமைய முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபரான வாகிஸ்டரிடமும் விசாரணை நடத்தப்படும் எனத் தெரியவருகிறது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரசன்ன நாணயக்கார, லசந்த கொலை தொடர்பாக பல முக்கியமான தகவல்களை வெளியிட்டுள்ளார் எனக் கூறுப்படுகிறது.

கிராம அலுவலர் பரீட்சையில் யாழ்ப்பாணத்தில் 76 பேர் சித்தி

கிராம சேவகர் சேவைக்குள் இணைத்துக் கொள்வதற்கு 2016ஆம் ஆண்டு நாடு முழுவதும் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் விவரம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 76 பேரும், மன்னார் மாவட்டத்தில் 27 பேரும், வவுனியா மாவட்டத்தில் 29 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 43 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 17 பேரும் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர். நாடு முழுவதும் ஆயிரத்து 668 பேர் சித்தியடைந்துள்ளனர். (ஐ)

மேலைப் புலோலியில் சதாவதானியின் நினைவு நிகழ்வு இன்று

பருத்தித்துறை, ஏப்.21

அகராதிப் பேராசான் சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையின் 111 ஆவது நினைவு தின விழா இன்று மாலை 5 மணிக்கு மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய முன்றிலில் நடைபெறும்.

நிலையத்தின் தலைவர் ப.சிவசுப்பிரமணியம் தலைமை வகிப்பார். யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொன்.பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

சதாவதானி கதிரவேற்பிள்ளை நினைவாக நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றோரின் பேச்சுக்கள், பட்டிமன்றம், சிறப்பு சொற்பொழிவு உட்படப் பல நிகழ்வுகள் விழாவில் இடம்பெறவுள்ளன. (உ)

கூட்டமைப்பின் மே தின நிகழ்வு நெல்லியடியில்!

யாழ்ப்பாணம், ஏப்.21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட மேதினம் எதிர்வரும் முதலாம் திகதி நெல்லியடியில் நடைபெறும்.

நெல்லியடி பொதுச் சந்தையிலிருந்து ஆரம்பமாகும் மேதின ஊர்வலம் அல்வாய், மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானம் வரை நடைபெறும். அங்கு மேதினம் கூட்டம் இடம்பெறும்.

நேற்று யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் உள்ள இலங்கைத்தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அறிய வந்தது.

இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் முட்டுக்கட்டை நிலையைத் தாண்டி செல்வதற்காகப் புதிய யோசனைத் திட்டம் ஒன்று சில தரப்புக்களினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியும் நாடாளுமன்றமும் ஒருங்கிசைந்து செயற்படாத சூழலில் குழப்ப நிலைமை நீடிப்பதாகக் கருதும் அந்தத் தரப்புக்கள், அதனால் இந்நெருக்கடியைத் தீர்ப்பதற்காக அதிகார மையத்தை இரண்டு இடங்களில் வைத்திருக்கும் போக்குக்கு முடிவுகட்டவேண்டும் என்று ஆலோசனை கூறியிருக்கின்றன.

அதாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து, முழு அதிகாரத்தையும் நாடாளுமன்றத்திடம் ஒப்படைப்பதே அந்த யோசனை.

இதற்காக அரசமைப்புத் திருத்தப் பிரேரணை ஒன்றை – அரசமைப்புத் திருத்தத்துக்கான 20A பிரேரணை என்ற பெயரில் – ஜே.வி.பியின் எம்.பி. ஒருவர் மூலம் நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையாகச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்த அரசமைப்புத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படுமானால் அதிகாரம் மிக்க பிரதமர் என்ற பதவியோடு மீண்டும் நாட்டின் தலைவராக மஹிந்த ராஜபக்ஷ வருவதற்குச் சட்டத் தடையேதும் இருக்காது என்று கருதும் கூட்டு எதிரணி, அதன் காரணமாக இந்தப் பிரேரணைக்கு ஆதரவு தரத் தயார் என்று அறிவித்துள்ளது.

ஐ.தே.கட்சி, கூட்டு எதிரணி,ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவை ஒன்றிணைந்து, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைப் பெற்று, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையையே முழுதாக ஒழிப்பதற்கான வாய்ப் புக்கள் மிகப் பிரகாசமாகத் தென்படுகின்றன என்கின்றன தென்னிலங்கை அரசியல் வட்டாரங்கள்.

ஆனால் அந்த முயற்சிக்கு எதிராகவும் குரல்கள் இப்போது தெற்கில் பலமாக ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

“ஜயையோ! இது இந்தியா மற்றும் மேற்கு நாடுகளுடன் சேர்ந்து ரணில் செய்யும் காய் நகர்த்தல். இதற்குக் கூட்டு எதிரணி பலியாகி விடக்கூடாது. இந்த முயற்சிக்கு ஆதரவு தரும் தனது முடிவைக் கூட்டு எதிரணி மீளப் பெறவேண்டும்.” – என்று கூக்குரலிடுகின்றது தென்னிலங்கையின் பேரினவாதத் தரப்பின் கட்டமைப்பான தேசிய அமைப்புக்களின் கூட்டமைப்பு. கலாநிதி குணதாஸ அமரசேகர, கலாநிதி வசந்த பண்டார, மேர்வின் சமர நாயக்க, முன்னாள் கடற்படைத் தளபதியும் எம்.பியுமானறியல் அட்மிரல் சரத் வீரசேகர போன்றோர் இந்த முயற்சிக்கு எதிராகத் தீவிரமாகக் குரல் கொடுக்கின்றனர்.

ஆனால் இந்த முயற்சி குறித்து தமிழர் தரப்பில் அதிகம் அலட்டிக் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

‘இராவணன் ஆண்டால் என்ன, இராமன் ஆண்டால் என்ன, கூட வந்த குரங்கு ஆண்டால் என்ன’ என்ற விட்டேத்தியான மனநிலை தமிழர் தரப்பில் ஏற்பட்டுள்ளமைதான் இந்த அசிரத்தைப் போக்குக்குக் காரணமோ...!

-மின்னல்-

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

பிரேரணை பிரதமருக்கு எதிராக; ஆனால் பிரச்சினை சு.கவுக்கு!

தென்னையில் தேள் கொட்ட பனையில் நெறி கட்டிய கதையாகியிருக்கின்றது கொழும்பு அரசியல்.

வந்தது என்னவோ ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைதான். ஆனால் அதனால், நெருக்கடிக்குள் சிக்கியிருப்பது மற்றைய பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியே.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பை அடுத்து சுதந்திரக் கட்சி முரண்பட்டு, கன்னை பிரிந்து, உச்ச மோதலில் பிளவுபட்டு நிற்கின்றது.

அக்கட்சியின் 96 எம்.பிக்களில் 55 பேர் ஏற்கனவே மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூட்டு எதிரணியில் அமர்ந்து விட்டனர்.

எஞ்சிய 41 எம்.பிக்களில் 16 பேர் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்தமையினால் தொடர்ந்து அரசில் நீடிக்கமுடியாமல் அதை விட்டு வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அந்த 16 பேரில் அறுவர் இதுவரை அமைச்சர்களாக இருந்தவர்கள். நான்கு பேர் இராஜாங்க அமைச்சர்கள். ஐவர் பிரதி அமைச்சர்கள். ஒருவர் பிரதிச் சபாநாயகர்.

இந்தப் பதினாறு பேரினதும் தற்போதைய நிலைமை திரிசங்கு சொர்க்கம்தான். இந்தப் பக்கமும் இல்லை, அந்தப் பக்கமும் இல்லை என்ற கட்டம்.

சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதியும் அவரது அணியினரும் தங்கள் கட்சி தொடர்ந்து தேசிய அரசில் – நல்லாட்சி அரசில் – நீடிக்கின்றது என்கின்றனர். அதன்படி சுதந்திரக் கட்சியின் செயலாளரான துமிந்த திஸநாயக்க மற்றும் சு.கவையும் உள்ளடக்கியதான பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரான மஹிந்த அமரவீர ஆகியோர் உட்பட்ட சு.கவின் 25 எம்.பிக்களும் அரசில் தொடர்ந்து நீடிக்கின்றனர். அமைச்சர்களுக்குரிய அதிகாரங்கள், பவிசுகளைத் தொடர்ந்து அனுபவிக்கின்றனர்.

ஆனால், பிரதமர் ரணிலுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் வாக்களித்த காரணத்தினால் வெளியே விடப்பட்டிருக்கும் சு.கவின் 16 எம்.பிக்களின் நிலைமை அப்படி அல்ல.

அவர்கள் எதிரணிக்குச் சென்று அமர்ந்தாலும் அவர்களை வரவேற்கும் நிலையில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணி இல்லை. ஜனாதிபதி மைத்திரி தரப்பின் அரசியல் செல்வாக்குத் தேய்மானம் அடைய, அரசியல் லாபம் கருதி இந்தப் பக்கத்தில் கடைசி நேரத்தில் ஒண்ட வந்தவர்களாகக் கூட்டு எதிரணி அவர்களை பார்க்கின்றது.

'எங்களிடம் வருவதானால் வாருங்கள், ஆனால், நீங்கள் தான் சுதநதிரக் கட்சி என்ற உரித்துடன் வாருங்கள். வெறும் அதிருப்திக் குழுவாக அங்கிருந்து (சு.க. பக்கத்திலிருந்து) வெளியேறி எங்களுடன் ஒட்டிக் கொள்ள வராதீர்கள்!' – என்ற செய்தி கூட்டு எதிரணித் தலைமையிடமிருந்து இந்த 16 பேர் குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறிய வருகின்றது.

அதனால் தாங்கள்தான் சுதந்திரக் கட்சித் தரப்பினர் என்று நிரூபிக்கும் இக்கட்டு இந்த 16 பேர் குழுவுக்கு நேர்ந்திருக்கின்றது.

சு.கவின் செயலாளர் பதவியை வைத்துள்ள அமைச்சர் துமிந்த திஸநாயக்கவும், சு.கவையும் உள்ளடக்கிய பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் பதவியைத் தக்க வைத்திருக்கும் அமைச்சர் மஹிந்த அமரவீரவும் மேற்படி சு.கவின் எஞ்சிய 25 எம்.பிக்கள் குழுவில் இடம்பெற்றிருக்கின்றமையால், தாங்கள்தான் உண்மையான சு.கவினர் என்று கூற முடியாத நெருக்கடி இந்தப் பதினாறுபேர் அணிக்கு இருக்கின்றது.

இதனால் இந்த அணியினர் துமிந்த திஸநாயக்கவுக்கும் மஹிந்த அமரவீரவுக்கும் எதிராகத் தங்களது அரசியல் பீரங்கி வேட்டுக்களைத் திருப்பியிருக்கின்றார்கள்.

அதற்குப் பதிலடி கொடுக்க முனைந்திருக்கின்றார் சு.க. செயலாளரான துமிந்த திஸநாயக்கா.

இதற்கிடையில் துமிந்த திஸநாயக்கவையும், மஹிந்த அமரவீரவையும் அவர்கள் சம்பந்தப்பட்ட செயலாளர் பதவிகளில் இருந்து நீக்குமாறு இரண்டு கூட்டமைப்புக்களினதும் (சு.க. மற்றும் பொ.ஜ.மு.) தலைமைப் பதவியை வகிக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்தவதற்காக அவசர தூது சென்றிருக்கின்றது பதினாறு எம்.பிக்கள் குழுவின் பிரதிநிதிகள் அணி.

லண்டனில் தற்போது இருக்கும் ஜனாதிபதியிடம் இந்த விடயங்களை நேரில் விளக்குவதற்காக பதினாறு எம்.பிக்கள் குழுவின் விசேட பிரதிநிதிகளாக டிலான் பெரேராவும் சந்திம வீரக்கொடியும் அங்கு விரைந்துள்ளனர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை வந்தது என்னவோ ஐ.தே.க. தலைவரான பிரதமருக்கு எதிராகத்தான். ஆனால், அதனால் குழப்பங்கள் நேர்ந்திருப்பது என்னவோ சுதந்திரக் கட்சிக் குள்ளேயே.

இதுதான் தென்னையில் தேள் கொட்ட பனையில் நெறி கட்டும் விவகாரம் இது! போலும்.

மன்னார் நகரசபை வரவேற்பு நிகழ்வில் ஐ.தே.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு

மன்னார், ஏப்.21

மன்னார் நகர சபையின் உறுப்பினர்கள் வரவேற்கும் நிகழ்வில் ஐ.தே.கவின் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

விருந்தினர்கள் உரையின் போதுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம் உரை நிகழ்த்தி முடிந்தபோது மன்னார் நகர சபையின் ஐக்கிய தேசியக்கட்சியின் பெண் உறுப்பினர்கள் இருவர் உட்பட நான்கு உறுப்பினர்களும் மண்டபத்தில் இருந்து வெளி நடப்புச் செய்தனர்.

மன்னார் நகர சபையின் புதிய உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் நகர சபையின் செயலாளர் எஸ்.எல்.லம்பேட் தலைமையில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் உள்ள தந்தை செல்வ நாயகத்தின் சிலைக்கு மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப் பிரகாசம் அன்ரனி டேவிட்சன் மாலை அணிவித்தார்.

–இதனைத்தொடர்ந்துதந்தை செல்வநாயகத்தின் சிலைக்கு முன்–மன்னார் நகர சபையின் புதிய தலைவர்,உப தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மாலை அணிவித்து மங்கள வாத்தியத்துடன்மன்னார்நகரசபைநோக்கி அழைத்துச் செல்லப்பட்டனர்.

–இதனைத்தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெற்றதோடு விருந்தினர்கள் உரை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சர்வ மதத் தலைவர்கள், வன்னி மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்,வடமாகாண சபை உறுப்பினர்எஸ்.பிரிமூஸ் சிராய்வா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம், மற்றும் மன்னார், மாந்தை மேற்கு, நானாட்டான் மற்றும் முசலி பிரதேச சபைகளின் தலைவர்கள், உப தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் நகர சபை உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

விருந்தினர்கள் உரையின் போதுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் உரை நிகழ்த்தி முடிந்தபோது, மன்னார் நகர சபையின் ஐக்கிய தேசியக் கட்சியின் பெண் உறுப்பினர்கள் இருவர் உட்பட நான்கு உறுப்பினர்களும், மன்னார் பிரதேச சபை, மாந்தை மேற்குப் பிரதேச சபை, மற்றும் முசலி பிரதேச சபை ஆகியவற்றின் தலைவர்கள் மற்றும் உப தலைவர்கள் மண்டபத்தில் இருந்து வெளி நடப்புச் செய்தனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம் ஐக்கிய தேசியக்கட்சி தொடர்பிலும் குறிப்பாக அமைச்சர் ரிசாத் பதியுதீன்தொடர்பாகவும் உரை நிகழ்த்தியமையைக் கண்டித்தே அவர்கள் மண்டபத்தில் இருந்துவெளிநடப்புச்செய்தனர்.

இலங்கைக்கு ஹெரோய்ன் கடத்த முயற்சித்தவர் கைது

கொழும்பு, ஏப் 21

ஆப்கானிஸ்தானில்இருந்து இந்தியா ஊடாக இலங்கைக்கு ஹெரோய்ன் கடத்த முற்பட்ட ஒருவர் இந்தியாவின் புதுடில்லியில்வைத்துக்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுமார்8கோடிரூபாபெறுமதியான ஹெரோய்னுடன் அவர் கைது செய்யப்பட்டார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து இதனுடன் தொடர்புடைய மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தஹெரோய்ன்போதைப் பொருளை ஆப்கானிஸ்தானில் இருந்து பாகிஸ்தான் ஊடாக

இந்தியாவுக்குக் கடத்தி வந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இது மிகப் பெரிய அளவில் நடத்தப்படுகின்ற போதைப் பொருள் வர்த்தகமாக இருக்கலாம்என்றுசந்தேகம்வெளியிட்டுள்ள இந்தியப் பொலிஸார், டில்லி நகரம் ஹெரோய்ன் வர்த்தகர்களின் மத்திய நிலையமாக மாறும் அபாயம் இருப்பதாக எச்சரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

சமையல் எரிவாயு தட்டுப்பாடு

கொழும்பு, ஏப் 21

நாட்டின் பல பகுதிகளில் சமையல் எரிவாயுவுக்கான தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமையல் எரிவாயுக்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களுக்கு 2.5கிலோ, 12.5கிலோ மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கிடைக்கப் பெறுவதாகவும் இதனாலேயே தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி முதல் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் சமையல் எரிவாயு விற்பனை செய்யும் நிறுவனங்கள் இதனை மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை எவராலுமே பிளவுபடுத்த முடியாது

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின்உறுப்பினர்கள்இடையில், பிளவுகளை ஏற்படுத்தச் சிலர்மேற்கொண்டுள்ளநடவடிக்கைகளை எதிர்கொள்ளத்தயாராக இருப்பதாகவும் கட்சியைப் பிளவுப்படுத்த எவருக்கும் இடமளிக்கப்போவதில்லைஎனவும் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் ஊடகங்க ளிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறினார்.

கட்டாயம் நாட்டின் ஆட்சி

பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

அதிகாரத்தை மஹிந்தவுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுஜன பெரமுன தற்போது இலங்கையில் உள்ள பிரதான அரசியல் கட்சியாக மாறியுள்ளது. ஒரு வருடம் என்ற குறுகிய காலத்தில் கட்சி வளர்ச்சியடைந்துள்ளது. மஹிந்தவின் தலைமைத்துவம் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் ஆகிய பிரதான இரண்டு காரணங்களால் கட்சி பிரபலமடைந்துள்ளது–என்றார். (ஐ)

நாளை

22.04.2018
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம் : புனர்பூசம் 8.25 வரை
திதி : ஸ்ப்தமி மு.இ வரை
சுபநேரம் : 09.01 – 10.31 வரை
இராகுகாலம் : 4.31 – 6.01 வரை

வெசாக்கை முன்னிட்டு புதிய முத்திரை வெளியீடு

கொழும்பு, ஏப். 21

வெசாக் போயா தினத்தை முன்னிட்டு புதிய தபால் முத்திரை ஒன்று அச்சிடப்படவுள்ளது என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்முறை வெசாக் தின முக்கிய நிகழ்வுகளில் ஒன்று பிங்கிரிய ரஜ மகா விகாரையில் இடம்பெற வுள்ளது.

இதனை முன்னிட்டு புதிய தபால் முத்திரை ஒன்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத் தால் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிவரும் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி வெசாக் போயா தினமான அன்று முதல் தபால் முத்திரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை கிரிக்கெட் நிறுவன தேர்தல் திகதி அறிவிப்பு!

கொழும்பு, ஏப். 21

இலங்கை கிரிக்கட் நிறு வனத்தின் தேர்தல் எதிர் வரும் மே மாதம் 19 ஆம் திகதி நடைபெறுமென அதன் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தத் தேர் தலில் அர்ஜுன ரணதுங் கவை நிறுத்தி வெற்றி பெறச்செய்வதற்கான முன் னெடுப்புக்கள் நடைபெற்று வருகின்றன என்றும் தெரி விக்கப்படுகின்றது.

அதேவேளை, இந்தத் தேர்தலில் மீண்டும் திலங்க சுமதிபால போட்டியிடவுள் ளார் என தகவல்கள் வெளி யாகியுள்ளமையும் குறிப்பி டத்தகது.

மேல், தென் மாகாணங்களில் 30 பேர் கைது; 13 துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்கள் மீட்பு!

கொழும்பு, ஏப். 21

திட்டமிட்ட குற்றங்களை கட்டுப்படுத்தும்நோக்கில்இந்த வருடத்தில்இதுவரையிலான காலப்பகுதிக்குள் பொலிஸ் விஷேட அதிரடிப் படை மேல் மற்றும் தென் மாகாணங் களில் மட்டும் முன்னெடுத்த விஷேட நடவடிக்கைகளில் ஆயுதங்கள், போதைப் பொருள்களுடன் 30 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், 5 கைக்குண் டுகள் 13 துப்பாக்கிகள் உள் ளிட்ட பெருமளவு ஆயுதங் களும் இந்தக் காலப்பகுதிக் குள் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸ் பேச்சாளர் பொலிஸ்அத்தியட்சகர்ருவன் குணசேகர தெரிவித்தார்.

2018 ஜனவரி மாதம் முத லாம் திகதியில் இருந்து கடந்த 17 ஆம் திகதி வரையி லான காலப்பகுதிகளிலேயே இந்த கைதுகள் இடம்பெற் றுள்ளன.

இந்தக்காலப்பகுதியில் 5 கைக்குண்டுகள், இரு ரீ56 ரக துப்பாக்கிகள், ரீ56 ரக துப் பாக்கி மெகசின் ஒன்று, ரீ56 துப்பாக்கிக்கு பயன்படுத்தப் படும் தோட்டாக்கள் 151 உம் கைப்பற்றப்பட்டுள்ளன.

அதனை விட 7 வாள்கள், ஒரு கைத்துப்பாக்கி, இரு கைத் துப்பாக்கி மெகசின்கள், 9 ரிவோல்வர்கள் மற்றும் ரிவோல்வர் கைத்துப்பக் கிகளுக்கு பயன்படுத்தப்படும் 185 தோட்டாக்கள், 810 வேறு தோட்டாக்கள் என்பனவும் பொலிஸ் அதிரடிப் படையின ரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

இதனைவிட ஹெரோ யின் 56 கிராமும், ஐஸ் போதைப் பொருள் 111 கிராமும் அதிரடிப் படையினரால் மீட் கப்பட்டுள்ள நிலையிலேயே 30 பேர் கைது செய்யப்பட் டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

பேண்தகு எதிர்காலத்தை அடைதலே இலங்கையின் பிரதான குறிக்கோள்

ஜனாதிபதி மைத்திரி லண்டனில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 21

பேண்தகு எதிர்காலத்தை அடைதல் ஏனைய நாடு களைப் போன்றே இஆலங்கை யினதும் பிரதான குறிக் கோளாகும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொதுநலவாய அமைப்பின் நிறைவேற்று சபை, பொது நல வாய அரச தலைவர்கள் மாநாட் டுடன் இணைந்ததாக நேற்று முன்தினம் பிற்பகல் லண்டன் நகரிலுள்ள லென்கெஸ்டர் இல் லத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உலக நாடுகள் பலவற்றின் அரச தலைவர்கள் பிரதிநிதித்து வம் செய்யும் இந்த நிறைவேற்று சபையில்பொதுநலவாய அமைப் பின் பசுமை பிரகடனமும் நிறை வேற்றப்பட்டது.

இதன்போது ஜனாதிபதி தெரி வித்தவை வருமாறு:-

ஒரு தீவு என்ற வகையில் எதிர் கால சந்ததியினரின் பயன்பாட் டிற்காக எமது நிலப்பரப்பு, காடுகள், ஆறுகள் மற்றும் சமுத்திரம் என் பவற்றுடன் பேண்தகு எதிர் காலத்தை உறுதி செய்தல் தொடர் பாக இலங்கை மிகுந்த அக்கறை யுடன் செயற்பட்டு வருகின்றது.

பூகோள ரீதியில் இலங்கை

கேந்திர முக்கியத்துவமுடைய மையப் புள்ளியில் அமைந்துள் ளதுடன், உலகின் வளர்ச்சிய டைந்துவரும் பொருளாதார சக்தி யாக ஆசிய நாடுகளே உருவெ டுத்து வரும் இந்தச் சந்தர்ப்பத்தில் எமது நாடும் தனது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த புவியி யல் அமைவிடம் காரணமாக பெற்றுக்கொள்ளக்கூடிய அனு கூலங்களால் வருமானம் ஈட்டக் கூடிய வழிமுறைகள் தொடர் பில் கவனம் செலுத்தி வருகின் றது.

வறுமையை இல்லாது ஒழித் தல், தொழில்வாய்ப்புக்களை ஏற் படுத்தல், சமத்துவத்தை ஊக்கு வித்தல் மற்றும் பேண்தகு அபிவிருத்தி போன்ற இலக்கு களை அடைவதற்காக எமது மக் களுக்கு கடல்சார்ந்த சூழலில் இருந்து அனுகூலங்களை பெற் றுக் கொள்ள முடியும் என்பதுடன் நிரந்தரமான, பேண்தகு எதிர் காலத்தை அடைவதற்கான மார்க்கம் இதுவாகும்.

ஐக்கிய இராச்சியத்தால் முன் மொழியப்பட்டுள்ள 'தூய்மை யான சமுத்திரங்களுக்கான ஒப் பந்தத்திற்கு' பூரண ஒத்து ழைப்பை வழங்க நாம் தொடர்ந் தும் அர்ப்பணிப்புடன் செயற் படுவதுடன், இந்த பின்னணியில் 'பொதுநலவாய அமைப்பின் பசுமை பிரகடனம்' நாம், சகலருக் கும் பொதுவான பொறுப்பும் மர புரிமையும் ஆகும் என்றவகை யில்அதனைஎமதுஒன்றிணைந்த முயற்சியால் பாதுகாக்க வேண் டும் என்பதனால் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கின்றோம்.

அனைவரையும் ஒன்றி ணைத்து, நம்பகரமான வழி முறைகளினூடாக இணைந்து செயற்பட்டு முன்னோக்கிப் பய ணிக்கவும் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளவும் கூடிய இலக்குகளை அடைதலே பேண் தகு எதிர்காலத்திற்கான இலக்கா கும்.

பொதுநலவாய அமைப்பு இது தொடர்பாக பரஸ்பர நன்மை பயக்கத்தக்க புரிந் துணர்வை ஏற்படுத்துவதற்கான பின்ன ணியை வழங்கும் எனவும் ஜனா திபதி தெரிவித்துள்ளார்.

ஆலய உற்சவங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ். வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய (நாச்சிமார் கோவில்) வருடாந்த மஹாற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இவ் ஆலய மகோற்சவம் பதினைந்து தினங்கள் நடை பெறுவதுடன் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளது.

★★★

கிளிநொச்சி, ஏப். 21

கிளிநொச்சி இரணைமடு களகாம்பிகை அம்பாள் பெருங் கோயில் வருடாந்தப் பெருந் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இவ் ஆலயப் பெருந்திருவிழா பத்துத் தினங்கள் நடை பெறவுள்ளதுடன் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை முற் பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளன.

★★★

கோண்டாவில், ஏப். 21

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ மகாகாளி அம்பாள் மஹாற்ச வம் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இவ் ஆலய மஹாற்சவம் 10 தினங்கள் நடைபெறவுள்ளது டன் எதிர்வரும் 28 ஆம் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

★★★

எழுதுமட்டுவாள், ஏப். 21

எழுதுமட்டுவாள் மீனாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ சோமசுந்த ரேஸ்வரப் பெருமான் ஆலய கும்பாபிஷேக தின மணவாளக் கோல மகா சகஸ்ர சங்காபிஷேகம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு சோமசுந்தரேஸ்வரப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகமும் அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெறும்.

★★★

ஏழாலை, ஏப். 21

ஏழாலை தெற்கு மயிலங்காடு ஸ்ரீ முருகபுரம் வேம்படி ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய அலங்கார உற்சவம் வியாழக் கிழமை ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. இவ் ஆலய அங்கார உற்சவம் பதினொரு தினங்கள் நடைபெறவுள்ளதுடன் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்த உற்சவம் இடம்பெறும். (இ)

மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க் கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை –

யாழ் பிரதேசத்தில் -

குமரகோட்டம், இணுவில் கிழக்கு, கோண்டாவில் வடக்கு, வேலனைச் சந்தியிலிருந்து துறையூர் வரை, மடத்துவெளி மல்லான், ஆலடி சந்தி, புங்குடு தீவு, இறுப்பிட்டி, குறிகட்டுவான், நுணாவில், கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தச்சன் தோப்பு, தனங்களப்பு, கோகிலாக்கண்டி, கேரதீவு வீதி, அறுகுவெளி, இணு வில் ஒரு பகுதி, மல்வம், உடு வில், சங்குவெளி, பிப்பிலி, கட் டுடை, மானிப்பாய், ஆனைக் கோட்டை ஒரு பகுதி, மானிப்பாய் Gargills food city, அலுவலகம், Sanken construction , புங்குடு தீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் –

கிளிநொச்சி பிரதேசத்தில் -

முத்தையன்கட்டு பிரதேசத் திலும் –

மின்விநியோகம் தடைப்பட் டிருக்கும் என்று மின் பொறியிய லாளர் அறிவித்துள்ளார். (இ)

பாலியல் துஷ்பிரயோகம்; பெண் வைத்தியசாலையில்!

கொழும்பு, ஏப். 21

சித்திரை புத்தாண்டு விடுமுறையை கழித்துவிட்டு பணிக்காக திரும்பிய பெண் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

தாதியாக பயணியாற்றி வரும் 29 வயது கர்ப்பிணி பெண் அக்குரஸ்ஸவிலிருந்து மாத்தறை வீதியினூடாக பணித்த பஸ்லில் சென்றபோது நபரொருவர் அருகில் அமர்ந்து பெண்ணை தொட்டு சில்மிசம் செய்துள்ளார்.

இதற்கு மறுத்த பெண்ணின் மார்பைத் தொட்டு கைவிரல்களால் கடுமையாகக் காயப்படுத்திய அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பெண் சிகிச்சைக்காக மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

2 ஆவது ஆழ்கடல் கண்காணிப்பு கப்பல் பிரதமர் தலைமையில் கையளிக்கப்பட்டது

கொழும்பு, ஏப். 21

இந்தியாவில் கோவா கப்பல்களை நிர்மாணிக்கும் பகுதியில் இலங்கை கடற்படைக்காக தயாரிக்கப்பட்ட 2 ஆவது ஆழ் கடல் கண்காணிப்பு கப்பல் நேற்றுமுன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் அதிகாரிகளிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

இது தொடர்பான நிகழ்வு கொழும்பு கிழக்கு துறைமுக கொள்கலன் பிரிவில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தநிகழ்வில்பிரதமவிருத்தினராக கலந்துகொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விற்கு கடற்படையின் விசேட அணிவகுப்பு மரியாதை நடை பெற்றது.

இதன் பின்னர் கப்பலை கையளிக்கும் நிகழ்வும் இடம் பெற்றது. கப்பலின் கட்டளை தளபதி கப்டன் சமன் பெரேரா விடம் இந்த கப்பல் கையளிக் கப்பட்டது.

இதற்கான கடற்படை சம்பிரதாய நிகழ்வுகள் இதனை தொடர்ந்து இடம்பெற்றன. பிரதமர் உள்ளிட்ட முக்கிய விருந்தினர்கள்கப்பலில்உள்ள நவீன வசதிகள் மற்றும் உபகரணங்களை பார்வையிட்டனர்.

நவீனவசதிகளைக்கொண்ட இந்த கப்பலின் நீளம் 107.5 மீற்றராகும் அகலம் 13.6 மீற்றராகும்.18 அதிகாரிகளும் 100 கடற்படைவீரர்களும் பணியாற்றக்கூடியதாக இது அமைந்துள்ளது. சிறிய ஹெலிக்கொப்டர்கள் இதில் இறங்கக் கூடிய வசதியும் உண்டு.

இந்த நிகழ்வில் மகாசங்கத்தினர் தலைமையில் மதத் தலைவர்கள் கடற்படை மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர, விவசாயத்துறை அமைச்சர் துமிந்ததிசாநாயக்க, பாதுகாப்பு இராஜாங்க் அமைச்சர் ருவான் விஜயவர்த்தன, பாதுகாப்பு செயலாளர் கபில வைத்திய ரத்ன, இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் தரன்சித் சிங் சந்து உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(க)

தினசரி ராசி பலன் (21.04.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் சித்திரிரை 8 ஆம் நாள் சனிக்கிழமை ஷஷ்டித்திதி. மாலை 6.28 மணி வரை பின்னர் ஸப்தமி. நட்சத்திரம்: திருவாதிரை இரவு 7.42 மணி வரை. பின்னர் புனர்பூசம். சித்தயோகம் இரவு 7.42 வரை பின்னர் அசுபயோகம்.

ராகுகாலம் - காலை 9.04 மணி முதல் 10.36 மணி வரை
சுபநேரம் - மாலை 2.58 மணி முதல் 4.28 மணி வரை
இன்று ஷஷ்டி விரதம்.
திவசம் செய்ய வேண்டிய திதி - சித்திரை மாத வளர்பிறை ஷஷ்டி.
பிறந்த நட்சத்திர வழிபாடு - திருவாதிரை.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி

மேஷம்
சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். வியாபாரத்தில் கடின உழைப்பால் ஓரளவு லாபம் ஈட்டுவார்கள். உத்தியோகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும்.

ரிஷபம்
ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவார்கள். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டாகும். பூர்வீகச் சொத்தால் வருமானம் வரும்.

மிதுனம்
நன்மையான நாள். பணப்புழக்கம் மன நிறைவைத் தரும். மதிப்பு, மரியாதை கூடும். சிலருக்கு புது வேலை அமையும். தேகாரோக்கியம் சீராகும். அசதி, சோர்வு நீங்கி உற்சாகம் பிறக்கும்.

கடகம்
கவலையான நாள். பணவரவு குறையும். குடும்பப் பிரச்சினைகளால் கவலை உண்டாகும். செலவுகளைச் சமாளிப்பதில் சிரமப்படுவார்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பது நல்லது.

சிம்மம்
உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். விலகிப் போன உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் அனுசரனையாக இருப்பார்கள். சகோதர உறவு வலுவானதாக இருக்கும்.

கன்னி
சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். வீண் விரயம் அலைச்சல்கள் அதிகரிக்கும். வீடு, வாகன பராமரிப்புச் செலவுகள் வரும்.

துலாம்
சுபீட்சமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி நிறைந்து சுபீட்சம் உண்டாகும். விலகிப் போன உறவினர்கள் வலிய வந்து சேர்வார்கள். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும். புது வீடு வாங்குவார்கள்.

விருச்சிகம்
அலைச்சல் மிகுந்த நாள். பணம் பற்றாக்குறையாக இருப்பதால் கடன் வாங்க அலைவார்கள். படித்து முடித்த சிலர் வேலை தேடி அலைவார்கள். சிலர் வேலை இட மாற்றத்தால் வாடகைக்கு வீடு தேடி அலைவார்கள்.

தனுசு
மத்திமமான நாள். வருமானம் சுமாராக இருக்கும். சுபச் செலவுகள் உண்டாகும். தொழிலில் அல்லல், அலைச்சல்கள் அதிகமாகும். உடல் நலம் பாதிப்படையும். புதிய முதலீடுகளைத் தவிர்ப்பது நல்லது.

மகரம்
யோகமான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். நீண்ட நாள்களாக சந்திக்க நினைத்த உறவினர்களைச் சந்திப்பார்கள். வாகன வசதி பெருகும். சொந்த வீடு வாங்கும் எண்ணம் நிறைவேறும்.

கும்பம்
கீர்த்தியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். நீண்ட நாள்களாக தள்ளிப் போன விஷயங்களை சாமர்த்தியமாக பேசி முடிப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் மதிக்கப்படுவார்கள்.

மீனம்
யோசனையான நாள். பணம் தட்டுப்பாடாக இருக்கும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் உண்டாகும். வீடு வாங்குவது, விற்பதில் தேக்க நிலை உண்டாகும். உறவினர்களுடன் வாக்குவாதங்கள், ஏமாற்றங்கள் வந்து நீங்கும்.

சந்திராஷ்டம நாள்: விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகாரியங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியவற்றை நாங்கள் செயற்படுத்திக் காட்டுவோம்

ஈ.பி.டி.பியின் மேலதிக நிர்வாக செயலாளர் ஸ்ரீரங்கேஸ்வரன்

தீவகத்தின் வேலணை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச சபைகளை ஏனைய சபைகளுக்கு முன்மாதிரியான சபைகளாக செயற்படுத்திக் காட்டுவோம் அதே சமயம் நாம் உள்ளூராட்சி தேர்தல் கால விஞ்ஞாபனத்தில் கூறியவற்றையும் முடியுமானவகையில் நடைமுறையில் செயற்படுத்திக் காட்டுவோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்மாவட்ட மேலதிகநிர்வாக செயலாளர் ஜயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக ஒவ்வொரு கட்சிகளும் தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டிருந்தன.

அந்தவகையில்தான் நாமும்மூன்றுமுக்கியவிடயங்களை முன்னிறுத்தியதாக எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டிருந்தோம். மக்களின் அன்றாட பிரச்சினைக்கானதீர்வு' அபிவிருத்தி மற்றும் அரசியலுரிமை பிரச்சினைக்கான தீர்வு போன்ற விடயங்களை முன்னிறுத்தி இருந்தோம்.

இந்நிலையில் தேர்தல் முடிவுற்று சபைகள் அமைக்கப்பட்டுள்ள நிலையில் நாம் எதிர்பார்த்த வெற்றி எமக்கு கிடைக்காத விடத்தும் எமது அனுபவங்களினூடாக எமது தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு ஏற்ப நிச்சயம் அதை செயற்படுத்தி காட்டுவோம் என்றும் தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதி ஆனந்த சுதாகரன் குறித்து அவர் குறிப்பிடுகையில் -

ஆனந்த சுதாகரனின் விடுதலை என்பது ஒரு அரசியல் அல்ல. அது ஒரு மனிதாபிமானநிலைப்பாடுஎன்பதையே நாம் வலியுறுத்த விரும்புகின்றோம்.

தமிழ் அரசியல் கைதியாக சிறைவாசம் அனுபவித்துக்கொண்டிருக்கும் ஆனந்த சதாகரனின் விடுதலையை விரைவுபடுத்த வேண்டும் என்பதில் எமக்கு மாற்றுக் கருத்துக் கிடையாது.

சிறைவாசம் அனுபவித்து வரும் ஆனந்த சுதாகரனின் மனைவியார் அண்மையில் உயிரிழந்த நிலையில் அவர்களது பிள்ளைகள் நிர்க்கதியான நிலையில் வழந்து வருகின்றனர்.

இந்நிலையில் அவரது விடுதலையை விரைவுபடுத்துமாறு செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அரசாங்கத்திடம் கோரிக்கையினை முன்வைத்திருந்தமையையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஆனந்தசுதாகரன் விரைவில் விடுதலை செய்யப்பட்டு நிர்க்கதியாகியுள்ள அவரது பிள்ளைகளுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அதற்காக நாம் தொடர்ந்தும் பாடுபடுவோம். - என்றார்.

(இ)

சகல இனத்தவர்களுக்கும் ஒரே கூரையின் கீழ் கல்விகற்கும் நிலைமை உருவாக்க வேண்டும்

அமைச்சர் மனோ தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 21

நாட்டில் சக வாழ்வை கட்டி எழுப்ப அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் பாராட்டத்தக்கவை என்று தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

சகலஇனங்களையும்சேர்ந்த பிள்ளைகள் ஒரே கூரையின் கீழ் கல்வி கற்கும் பின்புலத்தை

உருவாக்குவது அவசியம் .

ஆரம்ப பாடசாலை மட்டத்திலேயே மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கையில் தேசிய, சமய சக வாழ்வை உறுதி செய்வதற்காக ஸ்தாபிக்கப்பட்ட நாடாளுமன்ற குழுவின் கூட்டத்தில் அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

புத்தாண்டு கால கட்டத்தில் நாடெங்கிலும் 3,500 இற்கு மேற்பட்ட சுற்றிவளைப்புகள்

கலால் திணைக்களம் தகவல்

கொழும்பு, ஏப். 21

கலால் திணைக்களம் புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் நாடெங்கிலும் மூவாயிரத்து 500 இற்கு மேற்பட்ட சுற்றி வளைப்புக்களை மேற்கொண்டுள்ளது.

ஏப்ரல் 9 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆகக் கூடுதலான மதுபானத்தை சேமித்து வைத்தல், சட்டவிரோத மதுபானங்களை வாகனங்களில் கொண்டு செல்லல், சட்டத்திற்கு புறம்பான வகையில் ஸ்பிரிட் இரசாயனங்களை உற்பத்தி செய்தல் போன்றவை சார்ந்த சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஹெரோயின், கஞ்சா போதைப் பொருள்கள் தொடர்பான குற்றச்செயல்களில் ஈடுபடுவோரை சிக்க வைப்பதற்கும் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன என அறிவிக்கப்படுகிறது.

இந்த சுற்றிவளைப்புக்களில் சிக்கிய சந்தேகநபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அனுமதி பத்திரம் பெற்ற மதுபான விற்பனை நிலையங்களில் இடம்பெற்றதாகக்கூறப்படும் மோசடிகள் தொடர்பிலும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் தொலைபேசி ஊடாக மக்கள் வழங்கிய தகவல்கள் சுற்றிவளைப்புகளுக்கு துணை புரிந்தன என்றும் கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

(க)

சின்மயா மிஷனில் "தத்துவபோதம்"

யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தாவால் இன்று சனிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை நடைபெறும் வாசகர் வட்ட வகுப்பில், ஆதி சங்கரர் அருளிய, "சத்துவ போதம்" என்ற தலைப்பில் விரிவுரை இடம்பெறவுள்ளது என அறிவித்துள்ளனர். (இ

நூல் வெளியீடு

இணுவில், ஏப்.21

கிருஷ்ண யோகா நிலையம் சுவிஸ் வாழ் நாகலிங்கம் குலசிங்கத்தின் "வளமான வாழ்க்கை" நூல் வெளியீட்டு நிகழ்வு இணுவில் பரராஜ சேகரப்பிள்ளையார் மணி மண்டபத்தில் இன்று சனிக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி தெற்குப் பிரதேச சபை தவிசாளர் கருணாகரன் தர்சனும் கௌரவ விருந்தினர்களாக வலி தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் தவராசா துவாரகன், வரதராசா தனகோபி ஆகியோரும் கலந்துகொள்வர். (இ

கும்பாபிஷேகம்

தொல்புரம், ஏப்.21

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட, பஞ்சகுண்ட சகித மஹாகும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் 10.40 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணி முதல் இன்று சனிக்கிழமை மாலை 4 மணி வரையும் பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வும் இடம்பெறும். (இ

உலக புத்தக நாள்

யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ். பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் உலக புத்தக நாள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நூலக குவிமாட கேட்போர் கூடத்தில் அ.யேசுராசா தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் ச.சத்தியதேவன், ஜ. சண்முகன், தி. செல்வமனோகரன், த.அஜந்தகுமார், சோ.பத்மநாதன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (இ

ஜனாதிபதியை வரவேற்றார் பிரித்தானியப் பிரதமர்!

கொழும்பு, ஏப். 21

பொதுநலவாய அமைப்பின் நிறைவேற்று சபை, பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டுடன் இணைந்ததாக லண்டன் நகரிலுள்ள லென்கெஸ்டர் இல்லத்தில் ஆரம்பமாகியது.

நேற்றுப் பிற்பகல் ஆரம்பமான பொதுநலவாய நிறைவேற்று சபையில் கலந்துகொள்ள சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பிரித்தானியப் பிரதமர் தெரேசா மே அம்மையார் வரவேற்றார்.

உலக நாடுகள் பலவற்றின் அரச தலைவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் இந்த நிறைவேற்று சபையில் பொதுநலவாய அமைப்பின் பசுமை பிரகடனம் நிறைவேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஈரான் சபாநாயகர் அலி லரிஜானி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார்.

அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போது பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்து கொண்டார்.

2 ஆம் தவணை ஆரம்பமாக முன்னர்

மேல்மாகாண பாடசாலைகளில் சிரமதான நடவடிக்கைகள்!

கொழும்பு, ஏப். 20

மேல் மாகாணத்தில் இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் திறக்கப்படுவதற்கு முன்னர் சிரமதான நடவடிக்கைகள் மூலம் பாடசாலைகள் தூய்மையாக்கப்படவுள்ளன.

இதன் கீழ் மேல் மாகாண சபையின் நிர்வாகத்திற்கு உட்பட்ட சகல பாடசாலைகளிலும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சிரமதானம் இடம்பெறும் என்று மாகாண கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

டெங்கு நுளம்புகளை ஒழிப்பதும், விசாக நோன்மதி வாரத்திற்காக பாடசாலைகளை அலங்கரிப்பதும் இதன் நோக்கம் என்று மேல் மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் நிமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு புதிய திட்டம்

சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 21

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக பல தரப்பினரின் பங்களிப்புடன் புதிய திட்டம் ஒன்று உருவாக்கப்படும் என இளைஞர் விவகார மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வது குறித்து நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட சந்திப்பின்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொலிஸ் திணைக்களம், பிரதேச செயலகம், சுற்றுலா அபிவிருத்திச் சபை, தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை உள்ளிட்டவற்றின் பங்களிப்புடன் இந்த புதிய திட்டம் உருவாக்கப்படும்.

மிரிஸ்ஸ மற்றும் மெதிகம பிரதேசங்களில் அண்மையில் சுற்றுலாப் பயணிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சிகளின் பனிப்போர் முக்கியமல்ல; இனப்பிரச்சினைக்கான தீர்வே முக்கியம்

அமைச்சர் மனோ கூறுகிறார்

ஐ.தே.க., ஸ்ரீ ல.சு.க. என்பவற்றுக் கிடையிலான பனிப்போர் எங்கள் பிரதான பிரச்சினை அல்ல. நம் முன்னுரிமை பட்டியலில் முதலிடம் இனப் பிரச்சினைக்குத் தீர்வேயாகும் என்றும் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

தேசிய இனப்பிரச்சினைக்கு, பிரிபடாத நாட்டுக்குள்ளே தீர்வு காண்பதற்கு புதிய அரசமைப்புப் பணியை ஆரம்பித்தோம். அதில், நான், சம்பந்தன் உட்பட அனைத்து கட்சித் தலைவர்களும் இருக்கிறோம்.

ஆனால், தற்போதைய அரசியல் சந்தடிகளில் காணாமற்போயுள்ள புதிய அரசமைப்பு பணியை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும். பிரதமர் தலைமையிலான வழிகாட்டல் குழுவை மீண்டும் கூட்ட வேண்டும்.

புதிய அரசமைப்பு இல்லை என்றால், இனப்பிரச்சினைக்குத் தீர்வில்லை எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளை அமைக்கும் பணி நிறைவு

கடந்த தேர்தலைத் தொடர்ந்து புதிய உள்ளூராட்சி சபைகளை அமைக்கும் பணி நேற்றுடன் முடிவடைந்தது என உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஒரு மாதத்திற்குள் உள்ளூராட்சி சபைகளை அமைப்பது அவசியமாகும்.

இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியாகி ஒருமாத காலம் பூர்த்தியாகிறது. இது வரை உள்ளூராட்சி சபைகளை அமைப்பது பற்றி எதுவித பிரச்சினைகளும் தமக்கு அறிவிக்கப்படவில்லை என செயலாளர் கூறினார்.

இம்முறை 340 உள்ளூராட்சி சபைகளுக்காக தேர்தல் நடந்தது. நீதிமன்ற உத்தரவு காரணமாக பெந்தர – எல்பிட்டிய உள்ளூராட்சி சபைக்கான தேர்தல் இடை நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நினைவு கூரப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் திருமதி வாசுகி சுதாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அன்னை பூபதியின் பேர்த்தியான திருமதி கோபிதாஸ் குணோஸ்வரி பொதுச்சுடரை ஏற்றி வைத்தார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு திருமதி கோபிதாஸ் குணோஸ்வரி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச்செயலாளர் செ.கஜேந்திரன் ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர். அதனையடுத்து மலரஞ்சலியும் நினைவுரைகளும் இடம்பெற்றன. (இ



யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர்களின் சித்திரைப் புத்தாண்டு, பொங்கல் நிகழ்வும், பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகர் சேர். பொன் இராமநாதனின் பிறந்த நாள் நிகழ்வும் நேற்று திங்கட்கிழமை, யாழ். பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள இராமநாதன் மண்டப முன்றிலில் இடம் பெற்றன.

நிகழ்வில் சேர். பொன் இராமநாத னின் உருவச் சிலைக்கு மலரஞ்சலி செய்து, பொங்கல் இடம்பெற்றதுடன், கைவிஷேசமும் வழங்கப்பட்டது.

அச்சுவேலி பஸ் நிலையத்தில் கடந்த புதன்கிழமை யாழ். நீரிழிவு கழகம், நீரிழிவு நோயாரை இனங் காணும் மருத்துவ பரிசோதனையை நடத்திய போது... (இ

வடமாகாண சபையின் நிதித்திட்டத்தின் கீழ் 50 லட்சம் ரூபா செலவில் மன்னார் முருங்கன் பகுதியில் மன்னார் மாவட்டத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக விடுதி ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதனை அண்மையில் மன்னார் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஏ.செபமாலை தலைமையில் வட மாகாண சபை பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன் திறந்து வைத்தனர். நிகழ்வில் வட மாகாண சபை மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் மற்றும் வட மாகாண கூட்டுறவு ஆணையாளர் பொ.வாகீசன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-112)

கோண்டாவில் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு விழா மற்றும் இல்ல மெய்வன்மைப் போட்டியின் இரண்டாம் நாள் விழாவில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபனும் சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் கு.மதுசுதனும் கலந்து சிறப்பித்து பரிசிகளும் வழங்கி கௌரவித்த போது. (இ

லங்கன் பிரீமியர் லீக் தொடர்;

ரசிகர்களை மகிழ்விக்க ரி–20 போட்டிகள் ஒகஸ்ட முதல்!

டந்த காலங்களில் திறமை மிக்க வெளிநாட்டு நட்சத்திரங்கள் பங்கேற்கும் உள்ளூர் போட்டிகள் இலங்கையில் போதியளவு நடைபெறாது போனமையே, இந்நாட்டு வீரர்கள் தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ள தடையாக இருந்தது என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும் லங்கன் பிரீமியர் லீக் ரி–20 போட்டிகளின் இயக்குநருமான ரசல் ஆர்னோல்ட் தெரிவித்திருக்கின்றார்.

கிரிக்கெட் விளையாடும் பெரும்பாலான நாடுகளில் வெளிநாட்டு, உள்நாட்டு வீரர்கள் பங்கெடுக்கும் ரி–20 தொடர்கள் ஆண்டு தோறும் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு நாடுகளுக்கும் பிரத்தியேகமாக இருக்கும் இவ்வகைப் போட்டிகள் கிரிக்கெட் வீரர்களின் திறமைகளை வெளிக்காட்ட சிறந்த களத்தை ஏற்படுத்தி தருவதுடன், கிரிக்கெட் இரசிகர்களுக்கு விருந்து படைக்கும் நிகழ்ச்சிகளாகவும் அமைகின்றன.

இப்போட்டிகளினை ஒத்தவிதத்தில் இலங்கை கிரிக்கெட் சபையும் (SLC) லங்கன் பிரீமியர் லீக் (எல்.பி.எல்.) என்ற பெயரிலமைந்த ரி–20 தொடரை இந்த ஆண்டின் ஒகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் நடத்த தீர்மானித்துள்ளது.

இலங்கையின் இந்த ரி–20 தொடருக்கு பிரதான இயக்குநராக, 44 வயதான முன்னாள் மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர் ரசல் ஆர்னோல்ட் இம்மாத ஆரம்பத்தில் நியமிக்கப்பட்டிருந்தார்.

ஆசியாவில் கிரிக்கெட் விளையாட்டு பிரபல்யமாக காணப்படும் நாடுகள் அனைத்தும் தமக்கென உள்ளூர் ரி–20 தொடர்களை ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நடத்தி வருகின்ற வேளையில், இலங்கையில் மாத்திரம் இது மாதிரியான தொடர்கள் எதுவும் இல்லாமல் இருக்கின்றமை கிரிக்கெட் ரசிகர்களைக் கவலையில் ஆழ்த்தியுள்ளது. எனினும், இலங்கையும் தமக்கென தனித்துவமாக அமைந்த ஒரு கிரிக்கெட் தொடரை உருவாக்கி அதில் வெற்றியடையும் என ரசல் ஆர்னோல்ட் கூறியிருக்கின்றார்.

எங்களுக்கும் இப்படியான தொடர் ஒன்று தேவை. நாங்கள் எங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ளும் முயற்சிகளில தோல்வியடைந்திருக்கின்றோம். இங்கே அனைத்து நாட்டு வீரர்களும் பங்கெடுக்கும் ஒரு (கிரிக்கெட்) தொடரில் ஆர்வம் காட்டும் கலாசாரம் உள்ளது. இப்படியான தொடர், வீரர்களுக்கு தங்களது திறமைகளை வெளிக்காட்டும் ஒரு களமாக அமைவதோடு, அவர்கள் அழுத்தங்களுக்கு மத்தியில் விளையாடி திறமைகளை வளர்த்துக் கொள்ள ஒரு சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்தித் தருகின்றது. என கிரிக்பஸ் இணையத்தளத்திற்கு வழங்கிய செவ்வி ஒன்றில் கூறிய ஆர்னோல்ட் எல்.பி.எல். போட்டிகளின் அவசியத்தைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

> **“தற்போது ஆசிய கிரிக்கெட் சபைத் கூட்டத்தில் பங்கேற்க மலேசியா சென்றி ருக்கும் ஆர்னோல்ட் அங்கிருந்து வந்த பின், மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் எல்.பி.எல். போட்டிகளின் இயக்குநர் பதவியைப் பொறுப்பெடுத்துக் கொள்கின்றார்.”**

இலங்கை கிரிக்கெட் சபை 2011ஆம் ஆண்டு இதே மாதிரியான ஒரு ரி–20 தொடரை ஏற்பாடு செய்திருந்தும், அனுசரணையாளர்கள் போதியளவு கிடைக்காத காரணத்தினால் அப்போதைய தொடர் வெற்றியளிக்கவில்லை.

இத்தொடர் இடம்பெற்றால் இதன் மூலம் அனைவரும் மகிழ்ச்சி அடையவேண்டும் என்பதே எமக்குத் தேவை. நாம் அப்படியாகவே இத்தொடரினை ஏற்பாடு செய்ய வேண்டியுள்ளது.

இத்தொடரினால் மகிழ்ச்சி அடைபவர்களாக வீரர்கள் மாத்திரமின்றி கிரிக்கெட் இரசிகர்கள், அணிகளின் உரிமையாளர்கள் மற்றும் அனைவரும் இருக்க வேண்டும். எனக்கு இதனை வெற்றிகரமாக நடத்த முடியும் என்ற உறுதியான நம்பிக்கை இருக்கின்றது. அதோடு, இப்போட்டிகள் மீதுள்ள ஆர்வம் எனக்கு இன்னும் எதிர்பார்ப்புக்களை உருவாக்குகின்றது என ஆர்னோல்ட் மேலும் கூறினார்.

இதன் அவசியத்தை விளக்குகிறார் இயக்குநர் ரசல் ஆர்னோல்ட்

தற்போது ஆசிய கிரிக்கெட் சபைத் கூட்டத்தில் பங்கேற்க மலேசியா சென்றி ருக்கும் ஆர்னோல்ட் அங்கிருந்து வந்த பின், மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் எல்.பி.எல். போட்டிகளின் இயக்குநர் பதவியைப் பொறுப்பெடுத்துக் கொள்கின்றார்.

தற்போது ஆசிய கிரிக்கெட் சபைத் கூட்டத்தில் பங்கேற்க மலேசியா சென்றி ருக்கும் ஆர்னோல்ட் அங்கிருந்து வந்த பின், மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் எல்.பி.எல். போட்டிகளின் இயக்குநர் பதவியைப் பொறுப்பெடுத்துக் கொள்கின்றார்.

முன்னதாக, இலங்கை கிரிக்கெட் சபை உத்தியோகத்தர்கள் இந்த எல்.பி.எல். போட்டிகளில் விளையாட இந்திய வீரர்கள் சிலரை விடுவிக்குமாறு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையிடம் வேண்டுகோள் விடுத்திருப்பதாக கூறியிருந்தனர். இந்திய வீரர்கள் இலங்கையின் இந்த உள் ளூர் தொடரில் பங்கேற்பது அனுசரணையாளர்களை ஈர்க்கவும், தொலைக்காட்சி உரிமத்தை அதிக ஏலத்துக்கு பெற்றுக் கொள்ளவும் உதவும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இதுவரையில் தமது வீரர்கள் வெளிநாட்டு ரி–20 தொடரொன்றில் விளையாடுவதற்கு சரியான முறையில் சம்மதம் ஒன்றை வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த எல்.பி.எல். ரி–20 தொடரில் ஆறு அணிகள் பங்கேற்கும் என இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால முன்னதாக கூறியிருந்தார். எனினும், தற்போதைய நிலை

வரத்தின்படி அது ஐந்து அணிகளாக மாற சந்தர்ப்பம் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும், அடுத்தடுத்த பருவ காலங்களில் ஆறு அணிகள் கொண்ட தொடராக எல்.பி.எல். போட்டிகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முதல் பருவகாலத்திற்கான எல்.பி.எல். போட்டித் தொடரை இந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் 18ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் 10ஆம் திகதி வரை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அத்தோடு, இலங்கை கிரிக்கெட் சபை அடுத்த ஐந்து வருடங்களிலும் இந்த காலப்பகுதியையினை (ஒகஸ்ட் –செப்ரெம்பர்) எல்.பி.எல். போட்டிகளை நடத்த ஒதுக்கி வைத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. ★



மருதனார்மடம் பகுதியில் சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு சிறுவர்களுக்காக அமைக்கப்பட்ட களியாட்ட அரங்கை (காணிவல்) வலி.தெற்கு(சுன்னாகம்) பிரதேச சபைத்தலைவர் க.தர்சன் நாடாவை வெட்டி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு வலி.தெற்கு(சுன்னாகம்) பிரதேச சபையின் அனுமதியுடன் தனியார் நிறுவனம் ஒன்றினால் மருதனார்மடம் பகுதியில் சிறுவர்களுக்காக இந்த களியாட்ட அரங்கு அமைக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் தவிசாளருடன் வலி.தெற்கு(சுன்னாகம்) பிரதேச சபை உறுப்பினர் திருமுருகராஜன் மற்றும் பிரதேச மக்கள், சிறுவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். மேற்படி அரங்கில் செயற்கை நீச்சல்குளம், சிறுவர் விளையாட்டுத்திடல்கள், உணவகங்கள், பாதாளக்கிணற்றில் மோட்டார் ஓட்டும் சாகசம் எனப்பல அரங்குகள் அமைந்துள்ளன.

கல்விக் கதிர் வெளியீடு

புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 29

பகுதி - I

37) வியாபாரி ஒருவன் ஒரு பொம்மையை ரூ 750 இற்கு வாங்கி ரூ 250 இலாபமாக வைத்து விற்றான் எனின் அவன் எவ்வளவிற்கு விற்று இருப்பான் ?

1. ரூ 1200 2. ரூ 1050 3. ரூ 1000

38) 70 இற்கும் 80 இற்கும் இடைப்பட்ட எண்களை எழுதும் போது இலக்கம் 7 எத்தனை தடவைகள் எழுதப்படும்?

1. 11 2. 10 3. 9

39) வரிசை ஒன்றின் சரி நடுவே நிற்கும் நுகரன் தான் 12 ஆவதாக நிற்பதாகக் கூறினால் அவ்வரிசையில் எத்தனை பேர் நிற்கின்றனர் ?

1. 12 2. 24 3. 23

40) ஒரு பாடசாலையின் ஆரம்பப் பிரிவில் 30 நிமிடத்திற்கு ஒரு மணியும், இடைநிலைப் பிரிவில் 35 நிமிடத்திற்கு ஒரு மணியும் ஒலித்தது. காலை 7.30 மணிக்கு இரண்டு மணியும் ஒன்றாக ஒலித்தால் மீண்டும் எத்தனை மணிக்கு ஒன்றாக ஒலிக்கும்?

1. 11.30 2. 2.00 3. 12.00

பகுதி - II

பின்வரும் பந்தியை வாசித்து விடை தருக

பரதன், இராமன் இருந்த இடத்தை அடைந்தான். இராமன் காலடியில் விழுந்தான்: விம்மி விம்மி அழுதான். பின் இராமனைப் பார்த்து "அண்ணா உன்னுடைய பிரிவைத் தாங்காமல் தந்தை உயிர் நீத்தார்." என விம்மலுடன் கூறினான். தந்தை உயிர் நீத்தார் என்ற செய்தி கேட்டதும் அடியற்ற மரம் போல் விழுந்தான். சிறிது நேரத்தின் பின் மயக்கம் நீங்கி எழுந்தான்.

1) இராமன் காலடியில் விழுந்தவன் யார்?

.....

2) மயக்கம் என்பதன் எதிர்க் கருத்து சொல்?

.....

3) இறந்தார் என்பது இப்பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்படுகிறது?

.....

4) காலடியில் என்பதைப் பிரித்து எழுதுக?

.....

5) இராமன் விழுந்தான் என்பதற்கு கூறப்பட்டுள்ள உவமானம் என்ன?

.....

.....

6) "விம்மி விம்மி"என்பது என்ன தொடர்?

.....

7) "பரதன், இராமன் இருந்த இடத்தை அடைந்தான். இராமன் காலடியில் விழுந்தான்: விம்மி விம்மி அழுதான்." இவ் வாக்கியத்திலுள்ள எழுவாய்?

.....

8) உயர்திணை ஆண்பால் பெயர் சொல் ஒன்றினை எழுதுக?

.....

9) பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1.மான், சிங்கத்திடம் இருந்து தப்பிக்க ..... (முயற்சி,முயச்சி) செய்தது.

2.ஆசை ..... (வெட்கம், வெக்கம்) அறியாது.

3.வீதி விதிகளை மதிக்காது செல்வது ..... (குத்தமாகும், குற்றமாகும்)

10) பின்வரும் தொடர்களுக்குரிய தனிச் சொல்லை எழுதுக

1. சுதந்திர மற்று வாழ்பவன் .....

2. வேறு துணையில்லை என ஒருவரிடம் அடைக்கலம் புகுதல் .....

11) சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லின் கீழ் கோடிடுக



(pineapple, fine apple, pineaple)



(Dear , Deer , Daer)

12) கீழுள்ள தமிழ் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக?

1.தயவு செய்து அமைதி பேணுங்கள் .....

2.உங்களுடைய வீட்டிற்கு செல்லவும் .....

13) சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக?

1. ஸ்துதிய் ஆயெத் என்ன .....



இறுதியில் மிஞ்சுவது வருடங்களின் எண்ணிக்கை அல்ல; அதில் வாழ்ந்த வாழ்க்கை மட்டுமே...

-ஆபிரகாம் லிங்கன்



சித்திரம் வரைந்து பார்ப்போம்!



குரங்கின் அறிவு

ஒரு நதியில் முதலை தனது துணைவியாருடன் வாழ்ந்து வந்தது. நதிக்கரையோரம் ஒரு குரங்கு வாழ்ந்து வந்தது. முதலையும் குரங்கும் நண்பர்களாக வாழ்ந்து வந்தன.

ஒரு நாள் பெண் முதலை ஆண் முதலையிடம் தன் ஆசையைத்தெரிவித்தது. எனக்குரொம்ப நாளாக குரங்கின் இதயத்தை சாப்பிடனும் என்று ஆசை! தாங்களால் கொண்டுவரமுடியுமா? எனக் கேட்டது

ஆண் முதலை யோசித்தது என்ன செய்வதென்று! திடீரென ஒரு யோசனை வந்தது, சரி நான் கொண்டுவருகிறேன் எனச் சம்மதித்தது. நம் குரங்கு நண்பனை வீட்டுக்கு விருந்துக்கு அழைப் போம்... அவனும் வருவான் கொன்று அவன் இதயத்தை சாப்பிடு எனக் கூறியது. பெண் முதலைக்கோ கொண்டாட்டம், சந்தோசம்...!

அடுத்த நான் ஆண் முதலை குரங்கு நண்பனை விருந்துக்கு அழைத்தது. குரங்கும் சம்மதித்தது முதலையின் முதுகில் ஏறி அமர்ந்ததும் முதலை புறப்பட்டது.

நடு ஆற்றில் சென்று கொண்டிருக்கும் பொழுது ஆண் முதலை நாம் எங்கே போகிறோம் என்று உனக்குத் தெரியுமா? எனக் கேட்டது.

அப்பாவி குரங்கு விருந்துக்குதானே என்று சொன்னது.

முதலை சொன்னது, அதுதான் இல்லை என் னோட மனைவி குரங்கின் இதயம்சாப்பிடஆசைப்பட்டா,அதுக் காகதான்உன்னைகூட்டிக்கொண்டு போகிறேன் என்று கூறியது.

சற்று குரங்கிற்கு அதிர்ச்சி யாக இருந்தது.

சற்று யோசித்த குரங்கு... அடடா என்ன நண்பா இதை முன் னாடியே சொல்லக்கூடாதா? நேற் றுத் தான் நான் என இதயத்தை எடுத்து காயப்போட்டேன் அது அங்கேயே இருக்கிறது என்று கூறியது.

முதலையும் அப்படியா வா திரும்பி போய் எடுத்துக்கொண்டு வருவோம் என்று திரும்பவும் கரைக்கு வந்து விட்டது. தப்பித்த குரங்கு முதலையிடம் கூறியது...! முட்டாள் முதலையே நீயெல் லாம் ஒரு நண்பன் என்னையே கொல்லப் பார்க்கிறாயா? என்று சொல்லிட்டு மரத்தின் மேல் ஏறி அமர்ந்து கொண்டது.



தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்' சிறுவர் சஞ்சிகைப் பிரிவு 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

பொதுநலவாய கண்டல் தாவர பாதுகாப்பு முயற்சிகளை தலைமை தாங்கி வழிநடத்தும் பொறுப்பு இலங்கைக்கு

கொழும்பு, ஏப். 21

பொதுநலவாய கண்டல் தாவர பாதுகாப்பு முயற்சிகளை தலைமை தாங்கி வழி நடத்தும் பொறுப்பு இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய இராஜ்ஜியத் தலைவர்களது மாநாட்டுடன் இணைந்ததாக அந்த அமைப்பின் நிறைவேற்றுச் சபைக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிறைவேற்றுச் சபையின் கூட்டத்திற்காக சென்ற ஜனாதிபதியை பிரிட்டன் பிரதமர் தெரேசா மே அம்மையார் வரவேற்றார். இந்தச் சபையில் பொதுநலவாய அங்கத்துவ நாடுகளின் இராஜ்ஜியத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.



இந்த அங்கத்துவ நாடுகள் மத்தியில் கண்டல் தாவரங்களைப் பாதுகாக்கும் முயற்சிகளுக்கு தலைமை தாங்கும் நாடாக இலங்கை பிரேரிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம் பெற்ற இராஜ்ஜியத் தலைவர்களது மாநாட்டிற்கு இடையில் இந்தப் பிரேரணை குறித்த அறிவித்தல் வெளியாகியது.

இதன் பிரகாரம் இலங்கையின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்படும். உலகெங்கிலும் கண்டல் தாவரங்களை பாதுகாக்கும் வழி வகைகளை ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுப்பது குழுவின் பொறுப்பாகும்.

2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இலங்கையில் கண்டல் தாவர பாதுகாப்புத் திட்டம் அமுலாகிறது. இதற்குக் கிடைத்த வெற்றிகரமான பெறுபேறுகள் உலகின் கவனத்தை ஈர்த்திருந்தன.

மனைவியை போத்தலால் குத்தி கொலை செய்த கணவன்!

கணவரொருவர் தனது 22 வயதான மனைவியை போத்தலால் குத்தி கொலை செய்த சம்பவம் குடவெல தெற்கு வெலிவேரிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

குடவெல தெற்கு வெலி வேரிய பிரதேசத்தில் கணவர் ஒருவர் மது அருந்திய நிலையில் வீட்டுக் சென்ற போது அவருக்கும் மனைவிக்கும் இடை யில் ஏற்பட்ட தகராறை அடுத்து மனைவியின் கழுத்துப் பகுதியில் கூர்மையான போத்தால் குத்தியுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் குட வெல தெற்கு வெலிவேரியபிரதேசத்தில் வசித்துவந்த 22 வயதுடைய இளம் மனைவியே உயிரிழந்துள்ளார்.

மனைவியை கொலை செய்த 26 வயதான கணவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தங்காலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கொழும்பு காணி பதிவு காரியாலயம் விரைவில் நவீனமயப்படுத்தப்படும்

கொழும்பு, ஏப். 21

கொழும்பு காணி பதிவு காரியாலயத்தை புனரமைத்து நவீன வசதிகளை உள்ளடக்க வேண்டும் என்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தீர்மானித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் எதுவித முன் அறிவித்தலும் இல்லாமல், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன இந்தக் காரியாலயத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்தக் காரியாலயத்தில் காணி பதிவு ஆவணங்கள் மிக பழைமையான முறையில் களஞ்சியப்படுத்தப்படுகின்றன.

இந்த ஆவணங்களுக்கு உரிய பாதுகாப்பும் இல்லாமல் காணப்படுகிறது.

காரியாலய பணிகளைச் சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல புதிய அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களை சேவையில் இணைத்துக்



கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆவணங்களை பாதுகாக்கும் நோக்கில் விசேட கணினி மென்பொருள் பயன்படுத்தப்படவுள்ளது.

இந்த காரியாலயம் தற்சமயம் இயங்கும் கட்டடம் மிக பழைமையானதாக இருப்பதால், இந்த கட்டடத்தை புனரமைத்தல் அல்லது புதிய கட்டடம் ஒன்றுக்கு காரியாலயத்தை மாற்றுவது குறித்தும் அமைச்சர் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளார். (க)

நுவரெலியாவில் ஐஸ்கட்டி போட்டி!

கொழும்பு, ஏப். 21

நுவரெலியா கோடைகால கொண்டாட்டத்திற்கு அமைவாக ஐஸ்கட்டிகளை கொண்டு பொருள்களைத் தயாரிப்போருக்கான போட்டி ஒன்று இம்முறை நுவரெலியாவில் நடைபெற்றுள்ளது.

இலங்கை சமையல்காரர்களின் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்தப் போட்டி, 2 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுகின்றது.

இதன் வெற்றியின் காரணமாக வருடம் தோறும் இந்தப் போட்டியை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டி

யில் கொழும்பு, களுத்துறை, கண்டி, நுவரெலியா போன்ற சுற்றுலா வலயங்களை சேர்ந்த சுமார் 10 பேர் வரையில் கலந்து கொண்டனர்.

கூட்டு எதிரணியில் சிலரை இயக்கி வருகின்றதாம் 'றோ'

கூட்டு எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிலரை இந்தியாவின் றோ புலனாய்வு அமைப்பு இயக்கி வருவதாகச் சிங்கள தேசிய அமைப்புகளின் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை ஒழிக்கும் வகையில் மக்கள் விடுதலை முன்னணி கொண்டு வரும் திருத்தச் சட்டமூலம் இந்தியா மற்றும் அமெரிக்கா இணைந்து எழுதிய நாடகத்தின் பிரதி எனவும் பந்துல குணவர்தனவின் சில கருத்துக்கள், அவருக்கும் இந்த நாடகத்தில் நடிக்கச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதோ என்றசந்தேகத்தைஏற்படுத்தியுள்ளதுஎனவும்ஒன்றியம்கூறியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சிங்கள தேசிய அமைப்புகள் ஒன்றியத்தின் உறுப்பினர் வசந்த பண்டார இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகக் கூட்டு எதிரணி இந்தப் பொறியில் கால் வைத்தால், அவர்கள் செய்யும் இறுதியான காட்டிக்கொடுப்பு இதுவாகும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை ஒழிக்கும் யோசனைக்கு ஆதரவளித்து, நாடாளுமன்றத்தை கலைக்கும் யோசனைக்கும் கூட்டு எதிரணி ஆதரவளிக்குமாயின் அது மிகப் பெரிய காட்டிக்கொடுப்பாக இருக்கும். எதற்காக மக்கள் விடுதலை முன்னணி கொண்டு வரும் 20 ஆவது திருத்தச் சட்டத்தைக் கூட்டு எதிரணி ஆத ரிக்கின்றது என்பது தெளிவில்லை.

ஏதோ ஒருவகையில் நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படுமாயின் அதனோடு சேர்த்து 13ஆவது திருத்தச் சட்டத்தையும் இரத்துச் செய்ய வேண்டும்.–என்றார். ஐ

தங்கத்தின் விலை கடுமையாக அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 21

இறக்குமதி செய்யப்படும் தங்கத்தின் மீது அரசு 15 வீத வரியை விதித்துள்ளதை அடுத்து, தங்கத்தின் விலை கடுமையாக அதிகரித்துள்ளது.

15 வீத வரி விதிப்பை அடுத்து 8 கிராம் எடை கொண்ட 24 கரட் தங்கத்தின் விலை, 62 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

புத்தாண்டுக்கு முன்னர், 8 கிராம் தங்கத்தின் விலை, 53 ஆயிரம் தொடக்கம் 54 ஆயிரம் ரூபாவாக இருந்தது.

8 கிராம் எடையுள்ள 22 கரட் ஆபரணத் தங்கத்தின் விலை, தற்போது, 59 ஆயிரம் முதல் 60 ஆயிரம் ரூபா வரை விற்கப்படுகிறது. இது முன்னர், 50 ஆயிரம் - 51 ஆயிரமாக இருந்தது.

அதேவேளை தங்கத்தின் இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளதால், தங்கக் கடத்தல் அதிகரிக்கும் என்றும் சட்ட விரோதமாக இறக்குமதிகள் இடம் பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் இறக்குமதி தங்கத்தின் மீது 10 வீத வரியும், 3 வீத மதிப்புக்கூட்டு வரியும் விதிக்கப்பட்டதை அடுத்து, இலங்கையில் இருந்து தங்கக் கடத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

தற்போது, இலங்கையில் 15 வீத வரி விதிக்கப்படும் நிலையில், இந்தியாவில் இருந்து இலங்கைக்கு தங்கம் கடத்தப்படும் வாய்ப்புகள் இருக்கின்றன என்று கூறப்படுகிறது.

ஸ்ரீல.சு.கவும் பொதுஜன பெரமுனவும் ஒன்றல்ல, இருவேறு கட்சிகளாகும்!

பஸில் ராஜபக்ஷ கூறுகின்றார்

கொழும்பு, ஏப். 21

தெளிவாகவே பொதுஜன பெரமுனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் வெவ்வெறு கட்சிகள் எனவும் பொதுஜன பெரமுன மக்களின் செல்வாக்குள்ள பிரபலமான கட்சியாக மாறியுள்ளது என்றும் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் தெளிவான வெற்றியைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றுவதே எமது அடுத்த கட்ட நடவடிக்கை. எமது கட்சி ஹைப்ரிட் வாகனம் போன்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் பொதுஜன பெரமுனவின் கொழும்பு கட்சிக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ளவர்கள் தமது கட்சியின் ஒரு பிரிவாக இந்தக் கட்சியை பார்க்கின்றனர். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

இத்தகையவர்களுக்கு வித்தியாசப்படுத்திப் பார்ப்பதற்கு தெளிவாகவே இந்தக் கருத்தை பஸில் ராஜபக்ஷ வெளியிட்டார்.

பொதுஜன பெரமுனவின் கட்சிக்கு உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளும் பணி அடுத்த கட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மக்களுக்கு சிறந்த அனுகூலத்தைப் பெற்றுத்தரும் வகையில் கூட்டு முயற்சிகள் அவசியம் என்கிறார் எலிசபெத் மகாராணி!

லண்டன், ஏப். 21

தமது மக்களுக்குக் கூட்டாக சிறந்த அனுகூலங்களைப் பெற்றுத்தரும் வகையில் கூட்டு முயற்சிகள் அவசியம் என எலிசபெத் மகாராணி தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய அமைப்பின் 25 ஆவது இராஜ்ஜியத் தலைவர்களின் மாநாடு நேற்று முன்தினம் இங்கிலாந்தின் பக்கிங்ஹாம் மாளிகையில் மிகவும் கோலாகலமாக ஆரம்பமானது.

இதன் அங்குரார்ப்பண விழா பிரிட்டனின் இரண்டாவது எலிசபெத் மகாராணியார் தலைமையில் இடம்பெற்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கலந்து கொண்

டார். இளவரசர் சார்ள்ஸ் இந்த மாநாட்டுக்கு வருகை தந்த இராஜ்ஜியத் தலைவர்களை வரவேற்றார்.

பொதுநலவாய அமைப்பின் தலைவியாக இரண்டாவது எலிசபெத் மகாராணியார் இராஜ்ஜியத் தலைவர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொதுநலவாய அமைப்பின் அங்கத்துவ நாடுகளில் வாழும் மக்களுக்கு அனுகூலங்களைப் பெற்றுத்தரும் வகையில் கூட்டு முயற்சிகள் அவசியம். மென்மேலும் ஒத்துழைப்புடன் பணியாற்றி புதிய வர்த்தக முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டும். அதன் ஊடாக மக்களின் வாழ்க்கையை சிறப்பாக்குவதற்கான வழிவகைகளை காண முடியும். பொதுவான எதிர்காலத்திற்காக என்ற தொனிப் பொருளில் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுபீட்சம், பாதுகாப்பு, நீதி, நிலைபேற்றுத்தன்மை ஆகிய துறைகளின் கீழ் பொதுநலவாய நாடுகளின் இலக்குகளை அடைவது குறித்து மாநாட்டில் கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

பொதுநலவாய அமைப்பின் தலைமைப் பொறுப்பு எமது மகன் சார்ள்ஸிடம் செல்வதை நான் விரும்புகிறேன். ஒரு தினமேனும் சார்ள்ஸ் பொதுநலவாயத் தலைவராகக் கடமையாற்றுவதைக் காண்பது எமது அபிலாஷை என மகாராணியார் மேலும் குறிப்பிட்டார்.

இதன் பிரகாரம், பொதுநலவாய அங்கத்துவ நாடுகளின் சார்பில் 53 இராஜ்ஜியத் தலைவர்களும் இன்று கூடி தீர்மானத்தை எட்டுவார்கள் எனப் பிரிட்டன் பிரதமரது அலுவலகம் அறிவித்துள்ளது.

கியூபாவின் புதிய ஜனாதிபதியாக மிக்வெல் டயாஸ் தேர்வானார்

ஹவானா, ஏப். 21

கியூபாவின் புதிய ஜனாதிபதியாக மிக்வெல் டயாஸ் தேர்வாகியுள்ளார்.

அமெரிக்காவிற்கு அருகில் உள்ள மிகச்சிறிய தீவு நாடு கியூபா. இது கரீபியன் கடலில் அமைந்துள்ளது. கம்யூனிஸ்ட் ஆட்சியின் இருக்கும் இந்த நாட்டில் மறைந்த புரட்சியாளரான பிடல் காஸ்ட்ரோ சுமார் 30 ஆண்டுகள் பிரதமர் மற்றும் ஜனாதிபதியாக இருந்தார்.

அவருக்கு பின் அவருடைய சகோதரர் ரவுல் காஸ்ட்ரோ சுமார் 10 ஆண்டுகளாக ஜனாதிபதியாக பதவி வகிக்கிறார். 87 வயதான ரவுல் பதவியிலிருந்து ஓய்வு பெறப் போகிறேன் என அறிவித்திருந்தார்.

இதையடுத்து புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்காக நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் நடைபெற்

றது. இதில், துணை ஜனாதிபதியாக மிக்வெல் டயாஸ் ஜனாதிபதி பதவிக்கு வேட்பாளராக நிறுத்தப்பட்டார். அவரை எதிர்த்து எந்த வேட்பாளரும் நிறுத்தப்படவில்லை.

எனவே, மிக்வெல் டயாஸ் கனல் போட்டியின்றி ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். சுமார் 40 ஆண்டுகளாக காஸ்ட்ரோ குடும்பத்தினர் ஜனாதிபதியாக இருந்த நிலையில், அந்த குடும்பத்தைச் சேராத ஒருவர் ஜனாதிபதிப் பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ரவுல் காஸ்ட்ரோ ஜனாதிபதிப் பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலும், கட்சியில் தலைமை பதவி மற்றும் முக்கிய பதவிகளில் இருப்பார் என அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கத்வா, உன்னாவ் சம்பவங்களைக் கண்டித்து

அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்

வொஷிங்டன், ஏப். 21

ஜம்மு - காஷ்மீரின் கத்வா நகரில் 6 பேரால் சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு பின் கொடூர முறையில் கொலை செய்யப்பட்டார். இதேபோல், உத்தரப்பிரதேசத்தின் உன்னாவ் நகரில் 8 வயது சிறுமியை எம்.எல்.ஏ. ஒருவர் பலாத்காரம் செய்து விட்டார் என குற்றச்சாட்டு எழுந்தது. இதில் விசாரணைக்காகப் பொலிஸாரால் அழைத்து செல்லப்பட்ட சிறுமியின் தந்தை சிறையில் உயிரிழந்து விட்டார். இதில் தொடர்புடைய எம்.எல்.ஏ. கைது செய்யப்பட்டார்.

இந்த இரு சம்பவங்களும் நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. இதைக் கண்டித்து அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் இந்திய தூதரகம் முன் உள்ள காந்தி சிலை முன் இந்திய அமெரிக்கர்கள் கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அவர்கள், சிறுமிகளுக்கு எதிரான பாலியல் வன்முறைகளை கண்டித்தும், இதில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைக்க வேண்டும் என வலியுறுத்தியும் கோஷங்களை எழுப்பினர்.

மேலும், பாலியல் வன்முறை மற்றும் சிறுமி கொடூர கொலையை கண்டித்து அமெரிக்காவில் செயல்பட்டு வரும் பல்வேறு இந்திய அமைப்புகளும் தங்களது கண்டனத்தைத் தெரிவித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

1949 ஆம் ஆண்டுக்குப் பின்னர் லண்டனில் சுட்டெரித்த வெயில்

லண்டன், ஏப். 21

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் தற்போது கடும் வெயில் எரிந்து வருகிறது. கோடைக் காலம் என்றாலும் இதுவரை இல்லாத அளவுக்கு வெயில் சுட்டெரிக்கிறது. நேற்று அதிகபட்சமாக மேற்கு லண்டன் பகுதியில் 27.9 செண்டிகிரேட் அளவுக்கு வெயில் பதிவாகியுள்ளது.

1949ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்த அளவுக்கு வெயிலின் கொடூரம் இதுவே முதன்முறையாகும். குளிரில் வாழ்ந்து பழக்கப்பட்டுவிட்ட லண்டன் மக்கள் வெயிலின் தாக்கம் தாங்காமல் குளிர் பிரதேசங்களுக்கு படையெடுத்து வருகின்றனர்.

மக்கள் கடும் அவதி

எரிநட்சத்திரத்தில் வைரக்குவியல்; சூடான் மாணவர்கள் கண்டுபிடிப்பு!

நியூயோர்க், ஏப். 21

எரிநட்சத்திரத்தில் வைரக்குவியல் இருக்கின்றது என சூடான் பல்கலைக்கழக மாணவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் ஒரு எரி நட்சத்திரம் விழுந்தது. விண் வெளியில் நாசா அமைத்துக் கொண்டிருந்த ஆராய்ச்சி மையம் இதைக்கண்டு பிடித்தது.

ஆர்மஹாட்டா சிட்டா என அதற்கு பெயரிடப்பட்டது. ஆனால், அந்த நட்சத்திரம் பூமியை நெருங்குவதற்கு சில கி.மீற்றர் தூரத்தில் வெடித்துச் சிதறியது. பூமிக்குள் நுழைந்த அந்த நட்சத்திரம் சூடானில் இருக்கும் நுபியன் பாலைவனத்தில் பாதி எரிந்த நிலையில் விழுந்தது.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு இதை சூடானில் இருக்கும் கார்டோம் பல்கலைக் கழக மாணவர்கள் ஆராய்ச்சி செய்தனர். அப்போது ஆல்மஹாட்டா சிட்டா நட்சத்திரத்தின் உடல்பகுதி முழுவதும் சிறு சிறு வைரக்கற்கள் இருந்தன.

இந்த எரி நட்சத்திரம் வெடித்தபோது வைரம் உருவாக வாய்ப்பு இல்லை.

அதற்கு முன்பே அதில் வைரம் இருந்திருக்கலாம். எனவே இந்த எரிநட்சத்திரத்தில் வைரக்குவியல் இருந்திருக்கலாம் என கருதப்படுகிறது. அவை தூய்மையான வைரக்கற்கள் என்றும் அதற்கு முன்பு இது போன்ற வைரத்தை பார்த்ததில்லை என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இந்த வைரம் பூமி தோன்றும் முன்பே உருவாகி இருக்கலாம். மேலும் நட்சத்திரங்கள் மோதி சூரிய குடும்பம் உருவான போது ஆல்மஹாட்டா சிட்டா எரிநட்சத்திரமும் உருவாகி இருக்கலாம். சரியாக சொல்ல வேண்டுமானால் பூமி உருவான அதே நாளில் இந்த எரி நட்சத்திரமும் தோன்றியிருக்கலாம் என்றும் மனிதர்கள் எப்படி உருவானார்கள் என்பது கூட இந்த ஆய்வின் மூலம் கண்டறிய முடியும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிறந்து 244 நாளேயான பெண் குழந்தைக்கு அறுவை சிகிச்சை செய்து கின்னஸ் சாதனை

அலிகார், ஏப். 21

ஜவஹர்லால் நேரு மருத்துவ கல்லூரியின் மருத்துவர்கள் குழு பிறந்து 244 நாள்களேயான பெண் குழந்தைக்கு அறுவை சிகிச்சை செய்து கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளது.

உத்தர பிரதேசத்தில் அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகத்தின் ஜவஹர்லால் நேரு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் குழந்தைகளுக்கான அறுவை சிகிச்சை துறையின் தலைவராக இருப்பவர் மருத்துவர் ரிஸ்வான் அகமது கான்.

கடந்த 2017ம் ஆண்டு ஜனவரி 19ஆம் திகதி ரியா குமாரி என்ற பெண் குழந்தை பிறந்தது. இந்த நிலையில் கான் தலைமையிலான மருத்துவர்கள் அடங்கிய குழு ஒன்று கடந்த 2017ம் ஆண்டு செப்ரெம்பர் 21ல், பிறந்து 244 நாள்கள் ஆன அந்த குழந்தைக்கு அறுவை சிகிச்சை ஒன்றை நடத்தியது. இதில், 3 பித்த கற்கள் நீக்கப்பட்டன. அதனுடன் பித்தப்பையும் நீக்கப்பட்டது.

இந்த நிலையில் அறுவை சிகிச்சை முடிந்த பின் மருத்துவ அதிகாரிகள் இது பற்றி கின்னஸ் புத்தக அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர். அவர்கள் கடந்த 6 மாதங்களில் பெண் குழந்தை தொடர்புடைய ஆவணங்களை ஆய்வு செய்து இறுதியில் தங்களது வலைத் தளத்தில் சாதனையை பதிவிட்டுள்ளனர்.

இதற்கு முன் பிறந்து 271 நாள்கள் ஆன குழந்தைக்கு அறுவை சிகிச்சை செய்தது கின்னஸ் உலக சாதனையாக இருந்தது. அதனை இந்த சாதனை முறியடித்து கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.

மோடிக்கு எதிராக லண்டனில் ஆர்ப்பாட்டம்:

இந்திய தேசியக்கொடி கிழிக்கப்பட்டதால் பரபரப்பு

லண்டன், ஏப். 21

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் கொமன்வெல்த் மாநாடு நடந்து வருகிறது. அந்த மாநாட்டில் பங்கேற்பதற்கு பிரதமர் நரேந்திர மோடி லண்டன் சென்றுள்ளார். மேலும், இங்கிலாந்து பிரதமர் தெரசாமேயை அவர் சந்தித்து பேசினார்.

இதற்காக டவுனிங் தெருவுக்கு மோடி சென்ற போது, அவர் செல்லும் வழியில் திரண்ட இங்கிலாந்து வாழ் இந்தியர்கள் மோடிக்கு எதிராக ஆர்ப் பாட்டம் நடத்தினர். காஷ்மீர், உத்தர பிரதேச வன்புணர்வு சம்பவங்கள் மற்றும் இந்தியாவில் சமீபத்தில் நடந்த வன் முறைகளைக் கண்டித்து இந்தப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

இதில் இங்கிலாந்து நாடாளுமன்ற சதுக்கத்தில் குவிந்திருந்த காலிஸ்தான் ஆதரவாளர்கள் உள்ளிட்ட சுமார் 500 இந்தியர்கள், மோடிக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திக் கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதில் பல்வேறு இந்திய பெண்கள் அமைப்பினரும் பங்கேற்றனர்.

அப்போது கொமன்வெல்த் மாநாட்டையொட்டி அங்கு ஏற்றப் பட்டிருந்த இந்திய தேசியக்கொடியை, கொடிக்கம்பத்தில் இருந்து இறக்கிய சிலர் பின்னர் அதை கிழித்தனர். இதனால் அங்கு மோதலும், வன் முறையும் ஏற்பட்டது.

இந்தச் சம்பவங்களை படம் பிடித்துக்கொண்டிருந்த இந்திய தொலைக் காட்சி நிருபரை போராட்டக்காரர்கள் பிடித்து தாக்கினர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. உடனே அவரை கொட் லண்ட யார்ட் பொலிஸார் மீட்டனர். பின்னர் அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன.

பிரதமர் மோடியுடன் இங்கிலாந்துக்கு சென்றிருக்கும் மூத்த அதிகாரிகளில் ஒருவர் இந்தப் போராட்டம் குறித்து கூறுகையில்-

இந்தப் போராட்டம் மற்றும் தேசியக்கொடி கிழிப்பு சம்பவம் குறித்து இங்கிலாந்து அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு சென்றோம். அவர்களும் வருத்தம் தெரிவித்தனர். இது போன்ற சம்பவங்கள் நடைபெறும் என நாங்கள் எச்சரித்து இருந்தோம். இதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்கள் உறுதியளித்துள்ளனர். ஆர்ப்பாட்டத்தின்போது கிழிக்கப்பட்ட தேசியக்கொடி மாற்றப் பட்டு விட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக பிரதமர் மோடிக்கு ஆதரவாகவும், அவரை வரவேற்கும் வகையிலும் டவுனிங் தெருவில் ஏராளமான இந்தியர்கள் குழுமி இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் ஒவ்வொரு 15 நிமிடத்துக்கும் ஒரு சிறுமிக்கு பாலியல் தொல்லை!

ஆய்வில் அதிர்ச்சி தகவல்

புதுடில்லி, ஏப். 21

இந்தியாவில் ஒவ்வொரு 15 நிமிடத்துக்கும் ஒரு சிறுமிக்கு பாலியல் தொல்லை ஏற்படுகிறது என ஆய்வில் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

காஷ்மீர், உத்தரபிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் சிறுமிகள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட விவகாரம் சமீபத்தில் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த சூழலில் இந்தியாவில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங் கள் தொடர்பாக, குழந்தைகளின் உரிமைக் கான தான்னார்வ அமைப்பான 'க்ரை' நிறுவனம் ஆய்வு நடத்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

இதில் கடந்த 10 ஆண்டுகளில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் 500 சதவீதம் அதிகரித்து இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. அதாவது, கடந்த 2006ஆம் ஆண்டு 18 ஆயிரத்து 967 என இருந்த இந்தக் குற்றச் செயல்கள், கடந்த 2016 இல் 1 லட்சத்து 6 ஆயிரத்து 958 என உயர்ந்து இருக்கின்றன.

கடந்த 2016ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வின்படி நாட்டின் ஒட்டுமொத்த குற்றங்களில் மூன்றில் ஒரு பங்கு, குழந்தைகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பதிவானவை ஆகும். அந்தவகையில் ஒவ்வொரு 15 நிமிடங்களுக்கும் ஒரு சிறுமி பாலியல் தொல்லைக்கு ஆளாகும் அதிர்ச்சி நிலைவரம் தெரியவந்துள்ளது.

இதைப்போல குழந்தைகளுக்கு எதிராக பதிவாகி இருக்கும் மொத்த பாலியல் குற்றங்களில் 50 சதவீதத்துக்கும் அதிகமானவை, உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், மராட்டியம், டில்லி மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய 5 மாநிலங்களில் மட்டும் பதிவாகி இருக்கின்றமை மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

கார் பள்ளத்தில் கவிழ்ந்து 6 பேர் பலி; 2 பேர் காயம்

சிம்லா, ஏப். 21

இமாசல பிரதேசத்தில் கார் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்ததில் 3 பெண்கள் உட்பட 6 பேர் பலியாகினர்.

இமாசல பிரதேசத்தில் பவுரியா என்ற இடத்தில் இருந்து நேர்வா நோக்கி கார் ஒன்று சென்ற பொழுது சோபல் பகுதியில் பள்ளத்தில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் காரில் பயணம் செய்த 5 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

காயமடைந்த 3 பேரில் ஒருவர் மருத்துவமனை கொண்டு செல்லும் வழியில் பலியானார். ஏனைய இருவரும் நேர்வா பகுதியில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக் காகச் சேர்க்கப்பட்டு உள்ளனர்.

(க)

தமிழகத்துக்கான நிதியை குறைக்கக் கூடாது; நிதிக்குழு தலைவரிடம் ஓ.பி.எஸ். வலியுறுத்தல்

முதலீடுகளை காரணம் காட்டி, தமிழகத்துக்கான நிதியை குறைக்கக் கூடாது என்று நிதிக்குழுத் தலைவர் என்.கே.சிங்கிடம் துணை முதல் அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் வலியுறுத்தினார்.

துணை முதல் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் உத்தியோகபூர்வ விஜயமாக நேற்றுமுன்தினம் இரவு டில்லி சென்றார். பொதிகை தமிழ் நாடு இல்லத்தில் தங்கிய அவர் நேற்றுமுன்தினம் 15ஆவது நிதிக் குழு தலைவர் என்.கே.சிங்கை அவரது இல்லத்தில் சந்தித்து பேசினார். அப் போது, நாடாளுமன்ற துணை சபாநாயகர் தம்பிதுரை மற்றும் சில எம்.பி.க்கள் உடன் சென்றனர்.

இந்தச் சந்திப்பின்போது, தமிழ் நாட்டின் நிதி தேவைகள் தொடர்பான கோரிக்கை மனு ஒன்றையும் சமர்ப்பித்தார்.

அந்த மனுவில் ஓ.பன்னீர்செல்வம் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

15ஆவது நிதிக்குழுவில் தமிழ் நாட்டுக்கான நிதி பரிமாற்றம் தொடர்பாக சில கோரிக்கைகளை நான் முன்வைக்கிறேன். தமிழ்நாட்டுக்கு நிதி ஒதுக்கும்போது 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கை கருத்தில்கொள்ளக்கூடாது. 1971ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கு அடிப்படையிலேயே நிதி ஒதுக்க வேண்டும்.



தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகாரணமாக 1971ஆம் ஆண்டுக்கு பிறகு தமிழ் நாட்டில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் குறைக்கப்பட்டுள்ளது. எனவேதான், 1971ஆம் ஆண்டு கணக்கின்படி நிதி ஒதுக்கீடு செய்யக் கேட்கிறோம். 2011 ஆம் ஆண்டு கணக்கின்படி நிதி ஒதுக்கினால் தமிழகத்துக்கு பெரிய அளவில் இழப்பு ஏற்படும்.

அதைப்போல தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகள் மூலமாக அதிகளவில் முதலீடுகளை பெற்றுள்ளது. இதை காரணம் காட்டி தமிழகத்துக்கான நிதி ஒதுக்கீட்டை குறைக்கக் கூடாது என்றும் வலியுறுத்துகிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதைப் பெற்றுக்கொண்ட நிதிக் குழு தலைவர் என்.கே.சிங் தெரிவித்தவை வருமாறு:-

ஒவ்வொரு மாநிலத்தின் நிதி தேவையும் தனித்தனியாக மதிப் பிடப்படும். அவற்றின் சிறப்பு அம் சங்கள் கவனத்தில் கொள்ளப்படும். இந்தியாவின் வலிமைக்கு பெரிதும் பங்காற்றிய தமிழ்நாடு போன்ற ஒரு முன்னேறிய மாநிலத்தின் கோரிக் கையை நிதிக்குழு கவனமாக பரிசீலிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

ஈ.பி.டி.பியிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத் தமிழர்களின் வாக்குகளிலேயே ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள் என்றும் தமிழ்க் கூட்டமைப்பின் ஆட்சியமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்கிய ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கு அவர் அடையாளம் கொடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள யூ.எஸ். விருந்தினர் விடுதியில் நேற்று மாலை தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தே அவர் இந்த உண்மையை வெளியிட்டார்.

வடக்கு – கிழக்கு உள்ளூராட்சிச் சபைகளில் கூட்டமைப்பு ஆட்சியமைப்பதற்காக ஈ.பி.டிபியின்ஆதரவைக்கோரவில்லை என்றும், அவர்கள் தாமாக முன்வந்தே கூட்டமைப்புக்கு ஆதரவளித்தார்கள் என்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, அதன் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் தொடர்ச்சியாகக் கூறி வந்தனர்.

ஆயினும் அவர்களின் இந்தக் கூற்றை ஈ.பி.டி.பி. முற்றாக மறுத்திருந்தது. ஆட்சியமைக்கக் கூட்டமைப்புத் தம்மிடம் ஆதரவு கோரியது என்றும், அதற்கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளன. என்றும் அவற்றை வெளியிடத் தயார் என்றும் அந்த அமைப்பு நேற்று முன்தினம் கூறியிருந்தது.

இந்நிலையிலேயே ரெலோவின் செயலாளர் சிறிகாந்தா இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பதற்குக் கூட்டமைப்பு ஈ.பி.டி.பியின் ஆதரவைக் கோரியதா என்று அவரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:–

உள்ளூராட்சிச் சபைகளில் யாரும் தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலை எழுந்தபோது, கல்வியாளர்களும், மதத் தலைவர்களும் எங்களிடத்தில் பொதுக் கொள்கை ஒன்றை முன்னிறுத்தி, ஏனைய அரசியல் கட்சிகளுடன்பேசி இணக்கப்பாட்டுடன் ஆட்சியமைக்கவேண்டும் என்று கோரியிருந்தனர்.

இதனடிப்படையில் ஆட்சி அமைப்பதற்கு அனைத்துக் கட்சிகளுடனும் கூட்டமைப்பு பேச்சு நடத்தியது. பெரும்பாலான கட்சிகளிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை. குறிப்பாக எமது கோரிக்கையைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உடனடியாகவே நிராகரித்திருந்தது.

இதனடிப்படையில்தான் ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகத்துடன் நாடாளுமன்றத்தில் வைத்து ரெலோ பேச்சு நடத்தியது. அந்தப் பேச்சில் என்னுடன் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர் ஜனாகருணாகரன் ஆகியோர் பங்கு கொண்டிருந்தனர்.

இதன்போது பொது இணக்கப்பாடு எட்டப்பட்டது. குறிப்பாக வடக்கு – கிழக்கில் உள்ள சபைகளில் அதிக ஆசனங்களைப் பெற்ற கட்சிகள் ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு வழங்கவேண்டும் என்பதே அந்த இணக்கப்பாடு.

இதன்போது நெடுந்தீவு பிரதேச சபையில் ஈ.பி.டி.பி. ஆட்சி அமைப்பதற்குக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கும். அதேபோன்று வடக்கு – கிழக்கு மாகாணங்களில் உள்ள ஏனைய சபைகளில் கூட்டமைப்பு அதிகம் ஆசனங்களைப் பெற்ற இடங்களில் ஆட்சி அமைக்க ஈ.பி.டி.பி ஆதரவு தரவேண்டும் என்ற பொதுக் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களும், ஈ.பி.டி.பியின் தலைவர்கள் மற்றும் ஏனையவர்களுடன் பேசியிருந்தார்கள் என்பது உண்மை. – என்றார். (ஐ–7)

நெடுந்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்தோம்.

– இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் செயலாளரும், சட்டத்தரணியுமான என். சிறிகாந்தா.

யாழ்ப்பாணத்தில் யூ.எஸ் விருந்தினர் விடுதியில் நேற்று மாலை நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதாக இருந்த வேலணை பிரதேச சபையில், ஈ.பி.டி.பி. சிங்கள கட்சியுடன் இணைந்து ஆட்சியைத் தனதாக்கிக் கொண்டது. கரவெட்டிப் பிரதேச சபை ஆட்சி அமைப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தவிசாளர் பிரேரிக்கப்பட்டபோது, அதனை எதிர்த்து சிறிலங்கா சுதந்திரக் கட்சிதாமும் தவிசாளர் ஒருவரைப் பிரேரித்துப் போட்டியிட்டது. இதில் ஈ.பி.டி.பி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்காமல் சிங்களக் கட்சிக்கு ஆதரவு வழங்கியிருந்தது.

கூட்டமைப்புக்கும், ஈ.பி.டி.பிக்கும் இடையே எட்டப்பட்ட பொதுக்கொள்கை வேலணைப் பிரதேச சபை ஆட்சி அமைப்பின்போது சிதறடிக்கப்பட்டது. பின்னர் கரவெட்டி ஆட்சி அமைப்பின்போது அந்தக் கொள்கை சுக்குநூறாகத் தகர்க்கப்பட்டது. இதனாலேயே நாங்கள் ஈ.பி.டி.பிக்குப் பாடம் புகட்ட அவர்கள் அதிக ஆசனங்களை பெற்ற நெடுந்தீவு சபையைக் கைப்பற்றினோம்.

நெடுந்தீவுப் பிரதேச சபையைக் கூட்டமைப்பு கைப்பற்றத் தேவை இல்லை என்றும், அது ஒரு சிறிய சபை என்றும், குறைந்தமக்களைக்கொண்டது என்றும், அதனை ஈ.பி.டி.பி கட்சிக்கு விட்டுக் கொடுப்போம் என்றும் கூட்டமைப்பில் இருந்த சிலர் கூறினார்கள்.

ஆனால் தவறிழைத்த ஈ.பி.டி.பிக்கு நெடுந்தீவை விட்டுக் கொடுக்கக்கூடாது என்பதில் கூட்டமைப்பு தெளிவாக இருந்தது. இதனால்தான் ஈ.பி.டி.பிக்கு நெடுந்தீவில் அதிர்ச்சியைக் கொடுத்தோம். – என்றார். (ஐ–7)

மனோவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருமான வேலணை வேணியன் தலைமையிலான 10 பேர் நவோதய மக்கள் முன்னணியில் இணைந்துகொண்டனர்.

இதற்கான சிறப்பு நிகழ்வு கொழும்பு – 12 ஆமர்வீதியில் அமைந்துள்ள பிரைட்டன் றெஸ்ட் இன் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாட்டினால் இவர்கள் பிரிந்து சென்று நவோதய மக்கள் முன்னணியில் இணைந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது. (ஐ)

புதிதாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரத்து 200 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

வலிகாமம் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் 2014ஆம் ஆண்டு தரவுகளின்படி சுமார் 6 ஆயிரத்து 500 ஏக்கர் பொது மக்களுக்குச் சொந்தமான காணிகள் இராணுவத்தினர் வசமிருந்தன.

2015ஆம் ஆண்டு மைத்திரி – ரணில் கூட்டு அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் தற்போதுவரை சுமார் 3 ஆயிரத்து 200 ஏக்கர் காணிகள் ஐந்து கட்டங்களாக விடுவிக்கப்பட்டுள்ளன.

இதன் ஒரு கட்டமாக கடந்த 13ஆம் திகதி வலி. வடக்கில் படையினர் வசமிருந்த 683 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டது. அந்தப் பகுதிகளிலும் மக்களை மீள்குடியமர்த்தும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மயிலிட்டி – கட்டுவன் வீதிக்கு மேற்குப் புறமாகவுள்ள ஜே – 240, 246 மற்றும் 247 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளுக்குட்பட்ட தென்மயிலை, மயிலிட்டி வடக்கு மற்றும் தையிட்டி கிழக்கு ஆகிய பகுதிகள் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளன.

புதிதாக விடுவிக்கப்பட்டுள்ள பகுதியில் ஐந்து வணக்கத் தலங்கள் உள்ளன. மயிலிட்டி தெற்கு ஞானோதயா வித்தியாலயமும் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளது.

683 ஏக்கர் நிலப்பரப்பில் மீள்குடியமர, யாழ். மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் 350 குடும்பங்கள் உள்பட சுமார் ஆயிரத்து 200 குடும்பங்கள் தயாராகி வருகின்றன.

28வருடங்களின் பின்னர் தமது சொந்த நிலங்களைச் சென்று பார்வையிட்டு வரும் அந்தப் பகுதி மக்கள் தமது மீள்குடியமர்வைத் துரிதப்படுத்துமாறும் அதிகாரிகளிடம் கோரி வருகின்றனர்.

தற்போது மீள்குடியரும் மக்களுக்குத் தேவையான முதற்கட்ட பணிகளை முன்னெடுக்க வலிகாமம் வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சுகிர்தன் தலைமையில்விசேடசெயலணி ஒன்று அமைக்கப்பட்டு காடுகள் மற்றும் பாழடைந்த வீதிகளைத் துப்பரவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ)

நாட்டைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டி, தலதா மாளிகைக்கு நேற்றுத் தனது பாரியாருடன் சென்றிருந்த மஹிந்த வழிபாடுகளின் பின் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:–

நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவரது கடமைகள் என்ன? அவர் வடக்கைப் பிளவுபடுத்துவதை மாத்திரமே கடமையாக கொண்டுள்ளார். குறைந்த பட்சம் வடக்கு மக்களின் பிரச்சினைகள் பற்றிக் கூடக் கதைப்பதில்லை.

வவுனியாவிலும் கூட்டமைப்பினர் தோல்வியடைந்து விட்டனர். அவர்கள் மீதான நம்பிக்கை தமிழ் மக்களிடையே வீழ்ந்து கிடக்கின்ற நிலையில், நாங்கள்ஏன்புதிதாகமுயற்சிக்க வேண்டும்?

பொய்யான வாக்குறுதிகளை அளித்துவிட்டு எதிர்ப்பார்ப்புக்கள் தோற்றதன் பின்னர் மக்களின் எதிர்ப்புக்கள் வெளிவர ஆரம்பிக்கும். அதன் விளைவுதான்லண்டனில்மைத்திரிக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டம். – என்றார். (ஐ)

யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழு நேற்று மாலை வெளியிட்டது.

இதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட 15 வெளிவாரி உறுப்பினர்களுடன் உள்வாரியாகப் பதவி வழி வரும் 14 உறுப்பினர்கள் அடங்கலாக 29 உறுப்பினர்களைக் கொண்ட புதிய பேரவையின் ஆட்சிக்காலம் தொடர்ந்து வரும் மூன்று ஆண்டுகளாகும்.

புதிய பேரவையின் முதலாவது கூட்டம் எதிர்வரும் ஏப்ரல் 29ஆம் திகதி இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பேரவைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள வெளிவாரி உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் வருமாறு :

மனோசேகரம், ஏந்திரி. டி.கே.பி.யூ. குணதிலக, வைத்திய கலாநிதி பூ.லக்ஸ்மன், பேராசிரியர் எஸ். சிவசேகரம், பேராசிரியர் எச். எஸ். ஹிஸ்புல்லா, ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம், பேராசிரியர் சிவயோகநாதன், பேராசிரியர் ஜெயதேவ உயங்கொட, அதி. வண. ஜெரோ செல்வநாயகம், எஸ். விஷ்ணுகாந்தன், வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி, கலாநிதி ஆறு. திருமுருகன், வி. கனகசபாபதி, நா. வேதநாயகன், பி. ஈஸ்வரதாசன். (ஐ)

80 லட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸார் நேற்று அறிவித்தனர்.

அதனால் அந்தப் பணத்தை மோசடி செய்தனர் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் உள்ள தனியார் பாதுகாப்பு நிறுவன ஊழியர்கள் 5 பேர் சார்பிலும் முன்வைக்கப்பட்ட பிணை விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் பதில் நீதிவான் வி.ரி.சிவலிங்கம் நிராகரித்தார்.

அனுராதபுரம் பகுதியில் இயங்குகின்ற தனியார் பாதுகாப்பு நிறுவனமொன்று யாழ்ப்பாணத்திலுள்ள வங்கிகளின் ஏ.ரி.எம் நிலையங்களுக்குப் பணத்தை விநியோகம் செய்யும் பணியை முன்னெடுத்து வருகின்றது.

கடந்த மாதம் 9ஆம் திகதி அனுராதபுரத்திலிருந்து 11 கோடியே 74 இலட்சம் ரூபா பணத்தை 5 பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் அந்த நிறுவனம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தது.

உடுவில் பகுதிக்கு வந்து பணத்தைச் சரி பார்த்தபோது, அதில் 80 இலட்சம் ரூபா பணம் குறைவடைந்து காணப்பட்டுள்ளது. இதனையடுத்து அந்தப் பணத்தை எடுத்து வந்த வாகனத்தில்பாதுகாப்புஉத்தியோகத்தர்களாக வந்த பெரும்பான்மை இனத்தை சேர்ந்த ஐவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியல் வைக்கப்பட்டனர்.

அவர்கள் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டனர். சந்தேகநபர்கள் சார்பில் அவர்களது சட்டத்தரணியால் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது.

இந்தவழக்குவிசாரணைகள் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர்கள் இந்த விசாரணைகளை நீதிமன்றின் அடுத்த தவணையிலிருந்து முன்னெடுத்துச் செல்வர். அதுவரை சந்தேகநபர்களை விடுவிக்க ஆட்சேபனை தெரிவிக்கின்றோம் என்று பொலிஸார் மன்றில் விண்ணப்பம் செய்தனர்.

இரு தரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த பதில் நீதிவான், சந்தேகநபர்கள் 5 பேரையும் எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியல் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ)

மனோ கணேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்டிக் கொடுக்க இடமளிக்க முடியாது. இன்றைய நாளில், அண்ணன் மனோ கணேசன் தலைநகர தமிழ் மக்களின் குரலாக மட்டுமல்லாது, வடக்கு, கிழக்கு, மலையகம் வாழ் தமிழ் மக்களின் குரலாகவும் திகழ்கிறார் என மேல்மாகாண சபை உறுப்பினரும், ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதிச் செயலாளருமான சண்.குகவரதன் தெரிவித்தார்.

கட்சியிலிருந்து வெளியேறியவர்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:–

எமது கட்சிக்கும், தலைவருக்குமான மக்கள் ஆதரவு வாக்கு வங்கியை அழித்து, இலங்கையில் குறிப்பாகத் தலைநகரில் ஓர் அரசியல் வெற்றிடத்தை ஏற்படுத்தி, அதைக் கபளீகரம் செய்ய ஒரு திருட்டு ஓநாய் விரும்புகின்றது. இந்த திருட்டு ஓநாய் இன்று விலைபோகும் சில குள்ள நரிகளை விலை கொடுத்து வாங்கியுள்ளது. வெகு விரைவில் ஓநாயும், குள்ள நரிகளும் ஒன்றுசேரும்போது இவர்களின் முழுமையான நோக்கமும், அடையாளமும் வெளிப்படும்.

எமது தலைவரின் மீது சிறுபிள்ளைத்தனமான ஒரு நீண்ட குற்றப்பத்திரிகையை சில நரிகள் சுமத்துகின்றன. உண்மையிலேயே நீண்டகாலம் இந்தக் குறைப்பாடுகள் இருந்திருக்குமானால், அவற்றை முன்னரேயே கூறி இருக்கலாம். கலந்துரையாடி இருக்கலாம். ஆனால், இவர்கள் கொழும்பு மாநகர சபைத் தேர்தல் முடியும்வரை காத்திருந்து, பின்னர் அதிலே நியமனங்கள் வழங்கும்வரை காத்திருந்து, அதற்கு பின்னரே குற்றம் சாட்டுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன? மாநகர சபை உறுப்பினர் பதவி நியமனங்கள் தமக்குக் கிடைக்கவில்லை என்பதாகும். பதவி கிடைத்துஇருந்தால், அண்ணன் மனோ கணேசன். கிடைக்காவிட்டால், எதிரி மனோ கணேசன் என்ற கற்றுக்குட்டி அரசியலை செய்யும் இவர்களையே இன்று திருட்டு ஓநாய் விலை கொடுத்து வாங்கியுள்ளது.

இன்னொரு பெரியவர், இந்த தள்ளாத வயதிலும், பதவி வேண்டும் என சிறுபிள்ளை தனமாக அடம் பிடிக்கிறார். இன்று தலைவர் மனோ கணேசன் தனக்கு நியமனம் தர வில்லை என ஒப்பாரி வைக்கும் இவர், தலைவர் தன்னை 2002 ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரை பன்னிரண்டு ஆண்டுகளாக மூன்று முறை கொழும்பு மாநகரசபையில் உறுப்பினராக நியமனம் தந்து வைத்து இருந்தமையை மறந்து விட்டார்.

எனவே தான் எமது கட்சியிலிருந்து எவர் வெளியேறினாலும், எதுவுமே நடந்து விடப்போவதில்லை. எமது கட்சி இப்பொழுது மேலும் பலமடைந்து வருகின்றது. எனவே கட்சியிலிருந்து வெளியேறியவர்களுக்கு மக்கள் காலத்தால் நல்ல பாடத்தைப் புகட்டுவார்கள். – என்றுள்ளது. (ஐ)

மோடிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டத்தின்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் உருவம் மற்றும் இந்திய தேசியக் கொடியை நடு வீதியில் காலால் மிதித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டம் நடத்தினர்.

அவர்களால் வழங்கப்பட்ட மகஜரை இந்திய தூதரக அதிகாரிகள் நிராகரித்துள்ளனர். (ஐ)

செல்வாக்கு மிக்கவர்கள் பட்டியலில் கோஹ்லி

உலகின் செல்வாக்குமிக்கவர்கள் பட்டியலில் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோஹ்லி முதல் 100 இல் இடம்பிடித்துள்ளார்.

அமெரிக்க ரைம் பத்திரிகை ஆண்டு தோறும் உலகில் செல்வாக்குமிக்கவர் களின் பட்டியலை வெளியிடுவது வழக் கம்.

இந்த ஆண்டுக்கான பட்டியல் தற்போது வெளியாகியுள்ள நிலையில், இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் கோஹ்லி முதல் 100 இல் இடம் பிடித்துள்ளார்.

கடந்த ஆண்டில் எல்லாவிதமான கிரிக்கெட் போட்டியிலும் சேர்த்து மொத்த மாக 2818 ஓட்டங்கள் குவித்த கோஹ் லிக்கு இதில் இடம் கிடைத்துள்ளது.

இலங்கை ஜாம்பவான் குமார் சங்கக் கார, ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொண்டிங் ஆகியோருக் குப் பின் ஒரே ஆண்டில் அதிக ஓட்டங்கள் குவித்த மூன்றாவது வீரர் கோஹ்லி என்பது குறிப்பிடத்தக்கது.

கெய்ல் கொடுத்த பதிலடி

2018 ஐ.பி.எல். தொடரின் முதல் சதத்தைப் பதிவு செய்துள்ள பஞ்சாப் அணி வீரர் கிறிஸ் கெயில் தன் மீதான விமர்சனங்களுக்குப் பதிலடி கொடுத் துள்ளார்.

நேற்று முன்தினம் போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும், சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியும் மோதிய நிலையில் பஞ்சாப் அணி 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பஞ்சாப் அணி வீரர் கிறிஸ் கெயில் அதிரடியாக விளையாடி 63 பந்துக ளில் 11 சிக்சருடன் 104 ஓட்டங்கள் குவித்தார்.

இதன் மூலம் தன் மீதான விமர்ச னங்களுக்கு கெயில் பதிலடி கொடுத் தார்.

நட்சத்திர வீரரான கெயில் அதிக விலைக்கு ஐ.பி.எல் ஏலத்தில் வாங்கப் படுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலை யில் முதல் சுற்றில் யாருமே அவரை ஏலத்தில் எடுக்கவில்லை.

பின்னர் ஒரு வழியாக அடிப்படை விலையான 2 கோடிக்கு பஞ்சாப் அணி யால் வாங்கப்பட்டார்.

அவர் சரியான போர்மில் இல்லை எனக் கூறப்பட்ட நிலையிலேயே தனது அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் அதற்கு கெயில் முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்த திருநெல்வேலி கிரிக்கெட் கழகம்

விஜயரெட்ணம் ஞாபகார்த்தக் கிண் ணத்துக்காக நடத்தப்பட்ட ரி-20 துடுப் பாட்டத் தொடரில், திருநெல்வேலி கிரிக் கெட் கழக அணி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கே.ஸி. ஸி.ஸி. அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.ஸி. ஸி.ஸி. அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 171 ஓட்டங்களைக் குவித்தது.

ஜனதாஸ் ஓர் ஓட்டத்தால் சதத்தைத் தவறவிட்டு 99 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார்.

பிரதாபன் 28 ஓட்டங்களையும், ஜெய ரூபன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அனுரதன் 3 இலக்கு களைக் கைப்பற்றினார்.

171 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு, பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திரு நெல்வேலி கிரிக்கெட் கழக அணி, 17.4 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்கு களை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

அதிகபட்சமாக சுரேந்திரன் 89 ஓட்டங் களையும், சிவராஜ் 23 ஓட்டங்களை யும், தர்சிகன் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சத்தியன் 2 இலக்கு களை வீழ்த்தினார்.

ஆட்டநாயகனாக திருநெல்வேலி கிரிக்கெட் கழகத்தின் சுரேந்திரன், தொட ராட்ட நாயகனாக அதே அணியின் அசோக் ஆகியோர் தெரிவுசெய்யப் பட்டனர்.

உலகக் கிண்ண உதைபந்தில் 4 வீடியோ உதவி நடுவர்கள்

FIFA WORLD CUP RUSSIA 2018

ரஷ்யாவில் நடக்க உள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் 4 வீடியோ உதவி நடுவர்கள் நியம னம், ராட்சதத் திரைகள் வைப்பது உள்ளிட்டவை மேற்கொள்ளப்படும் என சர்வதேச உதைபந்தாட்டக் கூட் டமைப்பு (பிபா) அறிவித்துள்ளது.

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் ஜூன் மாதம் 14 ஆம் திகதி தொடங்கி ஜூலை மாதம் வரை ரஷ்யாவில் பல்வேறு நகரங் களில் நடைபெறவுள்ளன. இதுதொடர் பாக பிபா நடுவர் குழு தலைவர் பியர் லுகி கொலினா கூறியதாவது:

ஒவ்வொரு ஆட்டத்தின்போதும் 4 வீடியோ உதவி நடுவர்கள், மைதா னத்தில் ராட்சதத் திரைகள் இடம் பெறும். அனைத்தும் மொஸ்கோவில் அமைக் கப்படும் மத்திய கட்டுப்பாட்டு மையத் தில் இருந்து கண்காணிக்கப்படும். அனைத்து நடுவர்களும் மொஸ்கோ விலேயே இருப்பர். அடுத்த வரும் 2 வாரங்களில் கவர்சியானோவில் இது தொடர்பாக 36 நடுவர்கள், 63 உதவி யாளர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படும்.

வீடியோ உதவி நடுவர்கள் ஒவ் வொரு ஆட்டத்தின் போதும் பணியில் இருப்பர். அவர்கள் களத்தில் நடப்பது தொடர்பான காட்சிகளை நடுவர்களுக்கு விளக்குவர்.

இதற்காக 2 சிறப்பு நவீன கமெராக் கள் பயன்பாட்டில் இருக்கும். முதலா வது உதவி நடுவர் போட்டி லைவ் காட் சிக்கும், 2ஆவது உதவி நடுவர் ஓப் சைட் பொறுப்பிலும், இருப்பர். மூன் றாவது வீடியோ நடுவர் பிரதான வீடியோ நடுவருக்கு உதவியாகச் செயல்படு வார். மேலும் மைதானத்தில் ராட்ச தத் திரைகளும் வைக்கப்படும். - என் றார்.

மக்கள் நம்பிக்கையை மீண்டும் பெறுவோம்

ஆஸி. அணியின் புதிய தலைவர் உறுதி

பந்து சேதப்படுத்திய புகார் தொடர்பான பிரச்சினையில் மக்களிடம் இழந்த நம்பிக் கையை மீண்டும் பெறுவதே எங்கள் நோக் கம் என ஆஸி. டெஸ்ட் கிரிக்கெட் அணியின் புதிய தலைவர் டிம் பெயின் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா வுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் போது பந்தை சேதப்படுத்தியதாக எழுந்த புகார் தொடர் பாக அந்த அணியின் தலைவர் ஸ்சிமித், துணைத் தலைவர் வோர்னர், பந்து வீச்சாளர் பாங்கிராப்ட் ஆகியோருக்கு ஓராண்டு தடை விதித்து கிரிக்கெட் ஆஸ்தி ரேலியா உத்தரவிட்டது. மேலும் சிமித், வோர்னர் ஆகியோர் தங்கள் பதவிகளை ராஜினாமாச் செய்தனர்.

இந்நிலையில் டெஸ்ட் அணியின் புதிய தலைவராக டிம் பெயின் நியமிக்கப்பட்டுள் ளார். அவர் கூறியதாவது:

தற்போது திறந்த மனதுடன் நாங்கள் களம் காண உள்ளோம். பந்தை சேதப்படுத்திய விவகாரம் வீரர்கள் எதிர்பார்த்ததை விட பெரிதாகிவிட்டது. வருங்காலத்தில் வித்தி யாசமான முறையில் ஆட்டங்களை ஆடு வோம்.

ஆஸி. ரசிகர்களிடம் இழந்த நம்பிக்கையே மீண்டும் பெறுவதே எங்கள் உடனடி நோக் கமாகும். தடை செய்யப்பட்ட மூன்று வீரர்க ளும் மீண்டும் அணிக்குத் திரும்பலாம். ஆனால் மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப அவர்களது இணைப்பு அமைய வேண் டும். - என்றார்.

பந்து சேதப்படுத்திய புகார் தொடர்பாக அணியின் தலைமைப் பயிற்சியாளர் டரன் லீமனும் நீக்கப்படுவார் என எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. ரிக்கி பொண்டிங், ஜேசன் கிலெஸ்பி ஆகியோர் பயிற்சியாளர் பதவிக் கான பந்தயத்தில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

Kolkata Knight Riders	v	Kings XI Punjab	மாலை 4.00 மணி
Royal Challengers Bangalore	v	Delhi Daredevils	இரவு 8.00 மணி

இன்று 21.04.2018

விக்கி எடுக்கவுள்ள தீர்மானம் கூட்டமைப்பைப் பாதிக்காது

அடித்துக் கூறுகிறது ரெலோ

(எஸ் நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீவிக்னேஸ்வரன் அடுத்த மாகாண சபை தேர்தலை எதிர்கொள்வதற்காகப் புதிய கட்சியை அமைக்க விரும்பினால் அமைக் கலாம். அந்த விடயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பாதிக்காது.

– இவ்வாறு தெரிவித்தார் ரெலோ அமைப்பின் செயலாளரும், சட்டத்தரணியுமான என். சிறிகாந்தா.

அடுத்த மாகாண சபை தேர்தல் அறிவிக் கப்பட்டதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக யார் நிறுத் தப்படுவார் என்பது தீர் மானிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப் பில் அவர் இதனைக் கூறி னார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் ஊடகவியலாளர்களினால் கேள்வி எழுப்பப்பட் டது.

இதற்குப்பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி விக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு தமிழ் மக்களின் பெருந்தொகையான வாக்குகளைப் பெற்ற முதன்மை கட்சியாகும். இந்த நிலையில் எந்த நேரத்திலும் நாங்கள் தேர்தலைப் பற்றிச் சிந்தித் துக் கொண்டிருக்க முடி யாது. மக்கள் பிரச்சினை களும் உள்ளன. அவை தொடர்பிலும் சிந்திக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் தேசி யக் கூட்டமைப்பின் ஆரம்பகாலக்கட்சிரெலோ. அந்த வகையில் அடுத்த மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலும் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கப் படும்.

வடக்கு மாகாண சபை முதலமைச்சராக உள்ள சி. வீ. விக்னேஸ்வரன் விரும்பினால் புதிய கட்சி அமைக்க முடியும். அது தொடர்பில் கூட்டமைப் புக்கு அக்கறை இல்லை. அலட்டிக் கொள்ளப் போவதும் இல்லை.

தேர்தல் வரும்போது தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் தெரிவு செய் யப்படுவார். முதலமைச் சர் வேட்பாளர் தெரிவில் ரெலோவின் ஆதிக்கம் இருக்கும். – என்றார்.

(ஐ–7)

தவறிவிட்டது

இராசையா ஜனக்குமார் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல.580202853V), சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் மோட்டார் வாகன ஆவணங்கள் என்பன தவறிவிட்டன. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 077 357 3147 அல்லது 021 222 6290 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது அசோகா நகையகம், இல.111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இதனைக் கண்டெடுத்து வழங்குபவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

'டான்' தொலைக்காட்சியின் ஏற்பாட்டில் 7 ஆவது வருடமாக நடைபெறும் 'புதிய விடியல்' வடக்கின் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் மூன்றாவது கால் இறுதியாட்டம் நேற்று இரவு யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் மின்னொளியில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

'காலைக்கதிர்' நாளிதழ், ரொப்பாஸ், ரொப்பாஸ் மால் ஆகியவற்றின் அனுசரணை யுடனும், சரவணா அச்சகம், BEES SPORTS ஆகியவற்றின் இணை அனுசரணையுடனும் இந்தச் சுற்றுப் போட்டி நடைபெறுகிறது.

நேற்றைய கால் இறுதியாட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் வி.க. அணியை எதிர்த்து விளையாடிய இளவாலை யங் ஹென்றீஸ் வி.க. அணி ஒரு கோலினால் வெற்றி பெற்று அரை யிறுதிக்கு முன்னேறியது.

ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்

அன்புடையீர்,

கடந்த 27/03/2018 செவ்வாய்க்கிழமை இறைபதமெய்திய எங்கள் அன்புத் தாயார் அமரர் சரஸ்வதி தர்மலிங்கம் அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை 22/04/2018 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளமையால் தாங்கள் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

அத்துடன் எமது தாயாரின் இறுதி நிகழ்வுகளில் நேரடியாகக் கலந்து கொண்டும் தொலைபேசி வாயிலாகவும் ஏனைய வழிகளிலும் ஆறுதல் தெரிவித்தவர்கள் மற்றும் மலர்வளையம், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், பாதகைகள் ஊடாக தங்கள் துயர்பகிர்ந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"காமதேனு",
குடும்பத்தினர்
கந்தரோடை,
சுன்னாகம்.

இவ்வண்ணம்,
குடும்பத்தினர்.

இந்த அழைப்பைத் தங்களுக்கான தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

– தர்மலிங்கம் சித்தார்த்தன்

CARNIVAL

RIDES FOOD GAMES MUSIC

2nd year Jaffna's bigest CHILDREN FUN FESTIVAL

18 - 22 ஏப்ரல் மாலை 5 மணி தொடக்கம்
இரவு 10 மணி வரை

இடம்: மருதனார்மடம் சந்தி அருகாமை
மானிப்பாய் வீதியில்

யாழ் நகரில் பிரமாண்டமாக நடைபெற்று
பெரும் ஆதரவினைப் பெற்று நேயர்களின்
விருப்பத்திற்கிணங்க மீண்டும்
மருதனார் மடத்தில்.

கடைத்தொகுதி, விளம்பரங்கள்,
அனுசரணையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள்
தொடர்புகளுக்கு...

Prasannaraj

T.P : 077 25 465 11

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.04.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.